


# புதுகை வரலாறு நாளிதழ்

ISSN: 2582–5518




WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351

புதன் ❖ ஜனவரி. 03, 2024 சென்னை & புதுக்கோட்டை 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 90 ❖ ரூ.10

"இக்கட்டான சூழல்களில் தமிழகத்துக்கு உறுதுணையாக இருக்கிறது மத்திய அரசு"

# நம்பிக்கை

## தமிழ் பண்பாடு உலகெங்கும் பரவ வேண்டும் என்ற விருப்பம் எனக்குள் உள்ளது : பிரதமர் மோடி

திருச்சி , ஜன. 3–

''தமிழ் பண்பாட்டை பற்றி நான் பேசாத நாளே இல்லை. தமிழ் பண்பாடு உலகெங்கும் பரவ வேண்டும் என்ற விருப்பம் எனக்குள் உள்ளது" என்று திருச்சி விமான நிலையத்தின் இரண்டாவது முனைய திறப்பு விழாவில் பிரதமர் மோடி பேசினார்.



திருச்சி விமான நிலையத்தில் இரண்டாவது முனையம் ரூ.1112 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று நடந்தது. இந்த விழாவில் கலந்துகொண்ட புதிய முனையத்தை திறந்து வைத்தார் பிரதமர் மோடி. திறப்பு விழாவில் பேசிய பிரதமர் மோடி, "எனது தமிழ் குடும்பமே உங்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு நல்வாழ்த்துகள். இந்த ஆண்டில் எனது முதல் நிகழ்ச்சியே தமிழகத்தில் நடப்பதை பாக்கியமாக கருதுகிறேன். தமிழக மக்களுக்காக ரூ.20 ஆயிரம் கோடி மதிப்பிலான திட்டங்களை கொண்டுவந்துள்ளோம். இந்தத் திட்டங்களால் தமிழகம் மேலும் வளர்ச்சியடையும். மேலும், துவங்கப்பட்ட திட்டங்களால் ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாகும்.

கடந்த ஆண்டின் இறுதியில் தமிழக மக்கள் அதிக வலிகளை அனுபவித்தீர்கள். மாநிலத்தில் அண்மையில் கனமழையால் உயிரிழப்பும், உடமைகள் இழப்பும் அதிகம் ஏற்பட்டன. இத்தகைய சூழ்நிலையில் மத்திய அரசு தமிழகத்துக்கு உறுதுணையாக இருந்து வருகிறது" என்றார்.

**சினிமாவில் மட்டுமல்ல; அரசியலிலும் கேப்டன்:**

விழாவில் சமீபத்தில் மறைந்த தேமுதிக நிறுவனர் விஜயகாந்துக்கு இரங்கல் தெரிவித்தார் பிரதமர் மோடி. இது குறித்து தொடர்ந்து பேசுகையில், "கடந்த சில தினங்களுக்கு முன்பு விஜயகாந்தை இழந்தோம். அவர் சினிமாவில் மட்டுமல்ல அரசியலிலும் 'கேப்டன்' தான். திரைப்படங்களில் தன்னுடைய செயல்பாடுகள் வாயிலாக மக்களின் உள்ளங்களை கொள்ளை கொண்டிருக்கிறார் விஜயகாந்த். அரசியல்வாதியாக அவர் மக்கள் நலனை முன்னிறுத்தி வந்திருக்கிறார். அவருடைய மறைவுக்கு என்னுடைய இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் மறைவும் மிகவும் வேதனையை ஏற்படுத்தியது. சர் சி.வி.ராமன் போன்ற அறிஞர்களின் பங்கு நாட்டின் வளர்ச்சியில் அளப்பரியது. அந்த திறமைசாலிகளை உருவாக்கியதுதமிழகமண். மேலும், திருவள்ளுவர், பாரதியார் போன்ற ஞானிகள் அற்புதமான இலக்கியங்களை படைத்துள்ளனர். நான் எப்போதெல்லாம் தமிழகம் வருகிறேனோ அப்போதெல்லாம் எனக்கு புதிய உத்வேகம் கிடைக்கிறது. எனக்கு ஏராளமான தமிழ் நண்பர்கள் உண்டு. அவர்களிடமிருந்து தமிழ் கலாசாராத்தை நான் கற்றுக் கொள்கிறேன். நான் எங்கு சென்றாலும் தமிழ்நாட்டின் கலாசாரம் குறித்து பேச மறப்பதில்லை. எனக்கு தமிழ் மொழி, தமிழ் கலாசாரம் குறித்து உற்சாகம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

தமிழ் பண்பாட்டை பற்றி நான் பேசாத நாளே இல்லை. தமிழ் பண்பாடு உலகெங்கும் பரவ வேண்டும் என்ற விருப்பம் எனக்குள் உள்ளது. காசி தமிழ் சங்கமம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் தமிழை கொண்டு செல்கின்றன.

உலகின் தலைசிறந்த நாடுகளின் பட்டியலில் இந்தியா 5-வது இடத்தில் உள்ளது. அதேநேரம், இந்தியாவின் நவீன கட்டமைப்பில் முதலீடு அதிகரித்துள்ளதன் நேரடி பயன் தமிழகத்துக்கு கிடைத்து வருகிறது. அதேபோல் மத்திய அரசின் 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் சிறந்த தூதுவராகவும் தமிழகம் மாறி வருகிறது. திருச்சியில் தற்போது திறக்கப்பட்டுள்ள இந்த புதிய முனையத்தால் வளர்ச்சி பெருகுவதோடு, விமான நிலையத்தை மேம்படுத்தப்பட்ட சாலையுடன் இணைப்பதால் வெளிநாட்டினர் வருகையும் அதிகரிக்கும்.

தமிழகத்தில் ரயில் போக்குவரத்து மேம்படுத்தப்படுவதால் தொழில் வளர்ச்சியடையும். ஸ்ரீரங்கம், சிதம்பரம், மதுரை, ராமேஸ்வரம், வேலூர் ரயில் மூலம் இணைக்கப்படுகிறது. மாநிலத்தின் வளர்ச்சியே தேசத்தின் வளர்ச்சி என்பதே மத்திய அரசின் நோக்கம். அதை நோக்கியே மத்திய அரசு செயல்படுகிறது. பொருளாதாரம் மற்றும் கலாச்சாரம் மூலமாக இந்தியாவின் வளர்ச்சியில் தமிழகத்தின் சிறந்த பங்களிப்பை காண முடிகிறது. அதேநேரம், தமிழகத்துக்கு முன்பை விட 3 மடங்கு அதிக நிதியை மத்திய அரசு செலவு செய்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் மாநிலங்களுக்கு ரூ.120 லட்சம் கோடி நிதியை மத்திய அரசு அளித்துள்ளது. தமிழகத்தின் வளர்ச்சிக்கு மத்திய அரசு பெரும் நிதியை செலவு செய்து வருகிறது. மிழக இளைஞர்கள் மீது அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கு உள்ளது. அவர்களிடம் இருக்கும் உற்சாகம்தான் வளர்ச்சியடைந்த இந்தியாவின் நம்பிக்கையாக மாறும்." என்றார் பிரதமர் மோடி.

முன்னதாக, இதே விழாவில் பேசிய தமிழக முதல்வர் ஸ்டாலின், "வெள்ள பாதிப்புகளுக்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து நிதியை ஒதுக்க வேண்டும்" என கோரிக்கை வைத்து பேசிய நிலையில், அதற்கு பதிலாக பிரதமர் மோடியின் இந்தப் பேச்சு அமைந்தது.

## திராவிடக் கொள்கையை தமிழ்நாட்டில் முழங்கியவர் பாரதிதாசன் – முதல்வர் ஸ்டாலின் பேச்சு







திருச்சி, ஜன. 3–

''100 ஆண்டுகளுக்கு முன்புநீதிக்கட்சி ஆட்சியில் போடப்பட்ட விதையே, இன்று தமிழகம் கல்வியில் சிறந்து விளங்க காரணம். திராவிடக் கொள்கையை தமிழ்நாட்டில் முழங்கியவர் பாரதிதாசன்" முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 38வது பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். இந்த விழாவில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி மற்றும் தமிழக முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்தவிழாவில் பேசிய முதல்வர் ஸ்டாலின், "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு என்று திராவிடக் கொள்கையை தமிழ் நிலத்தில் முழங்கிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பேரால் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்திய பிரதமர் இந்த பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளமைக்கு எனதுமனமார்ந்தநன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலேயே உயர்கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலம் தமிழ்நாடு. கல்வியில் சிறந்த என்று எந்த பட்டியல் எடுத்தாலும் அதில் தமிழ்நாட்டு கல்வி நிறுவனங்கள் தான் அதிகமாக இடம்பெற்றிருக்கும்.

நூறாண்டுகளுக்கு முன்பு நீதிக்கட்சி ஆட்சி காலத்தில் கல்விக்காக போடப்பட்ட விதைதான் இன்றைக்கு வளர்ந்து கல்வியில் சிறந்த மாநிலமாக நாம் உயர்ந்து நிற்கிறோம். நமது திராவிட மாடல் அரசு அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் கல்லூரி கல்வி, அனைவருக்கும் ஆராய்ச்சி கல்வி என்ற இலக்கோடு தான் சமூகநீதி புரட்சியேகல்வித்துறையில் நடத்தி வருகிறது.

இன்னார்தான் படிக்க வேண்டும் என்று இருந்த நிலையை மாற்றி அனைவருக்கும் அனைத்து விதமான வாய்ப்புகளை உருவாக்கி தருகிறோம். தமிழ்நாட்டு மாணவர்களின்படிப்பிலும் வாழ்க்கையிலும் வெற்றியாளர்கள் ஆக்குவதற்கு நான் முதல்வர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

எல்லாமே தமிழ்நாட்டின் மாணவர் சக்தியை அடுத்த கட்டத்திற்கு வளர்த்திருக்கும்முயற்சிகள். இன்றைக்கு பாரதிதாசன் பல்கலைக்கழகம், உலக பல்கலைக்கழகங்களில் தரவரிசையில் பட்டியலும், தேசிய தரவரிசை பட்டியலிலும் இடம்பெற்றுள்ளது. அப்படிப்பட்ட சிறப்புமிக்க இந்த பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள புரட்சி கவிஞர் பாரதிதாசன் சிலை பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்துறைகள் தமிழ் மையம் ஆகிய அனைத்தும் தொடங்கியது நம்முடைய திராவிடமாடல் அரசுதான் என்பதை பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

கல்வியில் சமூக நீதியையும், புதுமைகளையும் புகுத்தும் வகையில் பல்கலைக்கழகங்களின் நோக்கமாக இருக்க வேண்டும். அத்தகையாக பல்கலைக்கழகங்களுக்கு சிறப்பான எதிர்காலம் உண்டு. இன்று பட்டம் பெறும் மாணவ கண்மணிகளே நீங்கள் தான்நாட்டின்எதிர்காலம். சிறந்த அதிகாரிகளாக, தொழில் முனைவர்களாக, நீங்கள் தேர்ந்த துறையில் சிறந்து விளங்குங்கள்.

உங்கள் பெற்றோருக்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் உங்கள் சேவையை திரும்ப வழங்கிடுங்கள். முக்கியமாக சிறந்த மனிதர்களாக விளங்குங்கள். உங்கள் வெற்றிக்கு உறுதுணையாக பட்டங்களை வழங்கிய பல்கலைக்கழகத்துக்கும் நீங்கள் பட்டம் பெற காரணமான ஆசிரியர்களுக்கும் பெருமைதேடித்தாருங்கள்.

இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் புகழ் சேருங்கள். இதுதான் உங்கள் முதலமைச்சராகவும் தந்தையின் உணர்வோடும் நான் வைக்கும் வேண்டுகோள் என்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்'' என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.






இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி மதுரை தமிழ்நாடு ஹோட்டல் கூட்டரங்கில் மதுரை, சிவகங்கைதேனிவிருதுநகர், கன்னியாகுமரி, ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த உதவி தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா தலைமையில் நேற்று நடைபெற்றது.



# இன்று




3-1-24

சிறுவாபுரி முருகன் கோயில் : சொந்த வீடு கனவு நிறைவேறும்.
சக வருடம் 1945 பௌஷம் 13

| சோபகிருது மார்கழி 18 | JAN - WED புதன் | ஜமா அத்துல் ஆகிர் 20 | இராசிபலன் |
|---|---|---|---|
| | | தேய்பிறை 003 / 363 | |

தேய். ஸப்தமி 28.53 (மா. 06.04) உத்திரம் 17.49 (மா. 01.39) தியாஜ் 40.36 அமிர்த 17.49 மேல் மரண. கீழ்திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாளுக்கு திருமஞ்சன சேவை. மாடவீதி புறப்பாடு. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோவிலில் ஸ்ரீநரசிம்ம மூலவருக்கு திருமஞ்சன சேவை.

| | நல்லநேரம் | கௌரி ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.30-10.30 | 10.30-11.30 | 12.00 | 10.30 | 07.30 |
| மாலை | 4.30-5.30 | 6.30-7.30 | 01.30 | 12.00 | 09.00 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்; தனுர் லக்கனம் இருப்பு நா. 2 வி. 16; சந்திராஷ்டமம் அவிட்டம் சதயம்; கரணம் : 6-7.30; சூரிய உதயம் : 6.31

அகல இருந்தால் உறவு, கிட்ட வந்தால் பகை

இராசிபலன்: மேஷம் - பாராட்டு; ரிஷபம் - புகழ்; மிதுனம் - ஜெயம்; கடகம் - அசதி; சிம்மம் - தனம்; கன்னி - அமைதி; துலாம் - ஆதரவு; விருச்சி - சோதனை; தனுசு - ஓய்வு; மகரம் - தொல்லை; கும்பம் - முயற்சி; மீனம் - ஊக்கம்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







### பொதிகை புத்தகத் திருவிழாவில்
## புகைப்பட கலைஞர்களுக்கான போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகை சான்றிதழ் வழங்கல்

சங்கரன்கோவில்; ஜன-3 சங்கரன்கோவில் பொதிகை புத்தகத் திருவிழாவை முன்னிட்டு நடந்த புகைப்பட கலைஞர்களுக்கானபோட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்களை திமுக வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ வழங்கினார்.



சங்கரன்கோவிலில் பொதிகைப் புத்தகத் திருவிழா கடந்த டிசம்பர் 24 ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வந்தது. புத்தகத்திருவிழாவில்புகைப்பட கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ சார்பில் புகைப்படக் கலைஞர்களுக்கானதனித்திறன் போட்டி அறிவிக்கப்பட்டது. இதில் பல்வேறு புகைப்பட கலைஞர்கள் ஆர்வத்துடன் போட்டியில் பங்கேற்றனர். ஏராளமான புகைப்படங்கள் வந்த நிலையில் முதல் மூன்று இடங்களுக்கான புகைப்படங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த புகைப்படத்தை எடுத்த புகைப்பட கலைஞர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சியில் தென்காசி திமுக வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு முதலிடம் பெற்ற கார்த்திகேயன் என்பவருக்கு ரூபாய் 10,000 மற்றும் சான்றிதழ், சுபகோமதி என்பவருக்கு இரண்டாம் பரிசாக ரூ5000 மற்றும் சான்றிதழ், மூன்றாம் இடம் பிடித்த சதீஷ் என்பவருக்கு ரூ.3000 மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார். தொடர்ந்து சிறப்பு பரிசாக ரூபாய் 1000 மற்றும் சான்றிதழ் அனந்த பத்மநாதன், கணேசன், மாரிமுத்து ஆகியோருக்கு வழங்கப்பட்டது. மேலும், இந்த போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. மேலும் புகைப்பட கலைஞர்கள் அனுப்பிய புகைப்படங்கள் அனைத்தும் புத்தக கண்காட்சியில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. நிகழ்ச்சியில் திமுக மாவட்டப் பொருளாளர் சரவணன், ஒன்றியச் செயலாளர் கே.வி. பெரியதுரை, நகரச் செயலாளர் பிரகாஷ்,உடற்கல்விஇயக்குனர் நாராயணன், நகர துணைச் செயலாளர் சுப்புத்தாய், தகவல் தொழில்நுட்ப பிரிவு சிவாஜி , கணேசன்,ரஜினிகாந்த், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கார்த்தி, வார்டு செயலாளர் சதாசிவம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## அரையாண்டு தேர்வு விடுமுறை முடிந்து பள்ளிகள் திறப்பு 3– ம் பருவ பாடப்புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது

புதுக்கோட்டை, ஜன,3, அரையாண்டுத் தேர்வு விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கப்பட்டதையடுத்து 3-ம் பருவ பாடப்புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இதனையொட்டி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மா.மஞ்சுளா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



தமிழக பள்ளிகளில் அரையாண்டுத் தேர்வு, இரண்டாம் பருவத்தேர்வு கடந்த மாதத்தில் நடைபெற்றன. தேர்வு முடிவடைந்து கடந்த 23 ந்தேதி முதல் விடுமுறை விடப்பட்டன. விடுமுறை முடிந்த பின் நேற்று பள்ளிகள் திறக்கப்பட்டன. அதன்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் பள்ளிகள் திறக்கப்பட்டன. பள்ளிகள் திறக்கப்பட்டவுடன் 7- ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 3- ம் பருவத்திற்கான விலையில்லா பாடப்புத்தகங்கள், நோட்டுகள், சீருடைகள் வழங்கப்பட்டன. அந்த முறையில் கந்தர்வக்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கந்தர்வக்கோட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி(தெற்கு) உள்ளிட்ட பல பள்ளிகளில்7- ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 3- ம் பருவத்திற்கான பாடப்புத்தகங்கள், நோட்டுகள், சீருடைகள் உள்ளிட்ட நலத்திட்டங்கள் வழங்கப்படுவதை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மா.மஞ்சுளா பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் கந்தர்வக்கோட்டை வட்டார வள மையத்தில் எண்ணும் எழுத்தும் திட்டத்திற்கான ஆசிரியர் கையேடு, மாணவர் பயிற்சி ஏட்டினை தலைமையாசிரியர்களிடம் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.






தென்காசி மாவட்டம் கடையநல்லூர் காசிதர்மத்தில் இயங்கி வரும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதியின் நூற்றாண்டை முன்னிட்டு கலைஞருக்கு பெருமை சேர்க்கும் விதமாக கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கல்லூரிக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் பெயர் சூட்ட தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என கடையநல்லூர் ஒன்றிய குழுத் தலைவர் சுப்பம்மாள் பால்ராஜிடம், திரிகூடபுரம் ஒன்றிய கவுன்சிலர் எஸ்.அருணாச்சல பாண்டியன் மனு அளித்தார்.

## வருமான வரித் துறை அதிகாரிகளை தாக்கிய வழக்கு : கரூர் திமுகவினர் 4 பேரின் ஜாமீன் ரத்து

மதுரை : ஜன. 3, அமைச்சர் செந்தில் பாலாஜி சகோதரர் வீட்டில் சோதனை நடத்தச் சென்ற வருமானத் துறை அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்திய வழக்கில் திமுகவினர் 4 பேரின் ஜாமீனை ரத்து செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



கரூரில் அமைச்சர் செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக் குமார் வீட்டில் கடந்தாண்டு மே மாதம் 25-ல் வருமான வரித் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். இந்த சோதனையின்போது வருமான வரித் துறை அதிகாரிகளுக்கும், அங்கு கூடிய திமுகவினர் இடையே மோதல் ஏற்பட்டது.

இதையடுத்து, வருமானத் துறை அதிகாரிகளை தாக்கி, வாரண்ட் நகல், அரசு முத்திரைகள், வழக்கு தொடர்பான ஆவணங்கள், பென்டிரைவ் ஆகியவற்றை எடுத்துச் சென்றதாக திமுகவினர் மீது போலீஸில் புகார் அளிக்கப்பட்டது. போலீஸார் வழக்குப் பதிவு செய்து திமுகவினர் பலரை கைது செய்தனர்.

திமுகவினருக்கு கரூர் நீதிமன்றம் ஜாமீன் வழங்கியது. இந்த ஜாமீனை ரத்து செய்யக் கோரி வருமான வரித் துறையினர் உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுவை உயர் நீதிமன்றம் விசாரித்து திமுகவினரின் ஜாமீனை ரத்து செய்து உத்தரவிட்டது.

இந்நிலையில், இந்த வழக்கில் ஜாமீன் பெற்ற திமுகவை சேர்ந்த ரீகன், ராஜா, சரவணன், ராமச்சந்திரன் ஆகியோருக்கு கரூர் நீதிமன்றம் வழங்கிய ஜாமீனை ரத்து செய்யக் கோரி உயர் நீதிமன்ற கிளையில் வருமானத் துறை அதிகாரிகள் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனு நீதிபதி எம். தண்டபாணி முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. பின்னர் திமுகவினர் 4 பேருக்கு கரூர் நீதிமன்றம் வழங்கிய ஜாமீனை, நீதிபதி ரத்து செய்து உத்தரவிட்டார்.

## ஆலங்குளத்தில் முன்னாள் அமைச்சர் ஆலடி அருணா 19வது நினைவு தினம்

தென்காசி; ஜன- 03

முன்னாள் தமிழக அமைச்சர் ஆலடி அருணாவின் 19வது நினைவு தினத்தை முன்னிட்டு ஆலங்குளம் பெருந்தலைவர் காமராஜர் சிலை அருகே தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவ படத்திற்கு தென்காசி தெற்கு மாவட்டச் செயலாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா, ஆலடி எழில்வாணன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜேசுராஜன், ஒன்றியச் செயலாளர்கள் செல்லத்துரை, மகேஷ் மாயவன், ஜெயக்குமார், மாரிவண்ணமுத்து, சிவன்பான்டியன், பொதுக்குழு உறுப்பினர் அருள், பேரூர் செயலாளர்கள் நெல்சன், குட்டி, சுடலை, லெட்சுமணன், அணி அமைப்பாளர்கள் சங்கீதா, சுதாகர், யூனியன் சேர்மன் திவ்யா மணிகண்டன், இளைஞரணி அமைப்பாளர் கிருஷ்ணராஜ், வர்த்தக அணி அமைப்பாளர் முத்துகுமார், மாணவரணி அமைப்பாளர் ரமேஷ், மாவட்ட பிரதிநிதி பொன்செல்வன், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சிவகுமார், சுப்பிரமணியன், கீழப்பாவூர் பேரூராட்சி மன்றத் தலைவர் ராஜன், யூனியன் துணை சேர்மன் கனகராஜ்முத்து பாண்டியன், சீ.சுதன், கோ.மாறன், மாரியப்பன், சங்கரநயினார், கணேசன், அருணாசலம், சேர்மச்செல்வன், வர்த்தக அணி துணை அமைப்பாளர் சுப்பையா பாண்டியன், பொன்அறிவழகன், தங்கச்சாமி, மாரியப்பன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ரூ.806 கோடி ஜிஎஸ்டி பாக்கி தொகையை செலுத்த எல்ஐசிக்கு நோட்டீஸ்

மும்பை : ஜன. 3-

806 கோடி ரூபாய் ஜிஎஸ்டி தொகை மற்றும் வட்டியை செலுத்தும் படி எல்ஐசி நிறுவனத்திற்கு மும்பை மாநில வரித்துறை துணை ஆணையரிடமிருந்து நோட்டீஸ் அனுப்பப்பட்டு இருக்கிறது.




2017-18 ஆம் ஆண்டுக்கான ஜிஎஸ்டி நிலுவை மற்றும் வட்டி தொகை 806 கோடி ரூபாய் செலுத்துமாறு மும்பை மாநில வரித்துறை துணை ஆணையர் சார்பில் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அதில், சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) மற்றும் அபராதத்துடன் 806 கோடி ரூபாய் வசூலிக்கப்படுகிறது என கூறப்பட்டுள்ளது.

இந்த நோட்டீஸால் எல்ஐசியின் செயல்பாடு மற்றும் பண பரிவர்த்தனைகளின் செயல்பாடு நடவடிக்கைகளில் எந்தவித பாதிப்பும் இல்லையென்று எல்ஐசி நிறுவனம் விளக்கம் அளித்திருக்கிறது.

அக்டோபர் 2023ல், 4,993 கோடி ரூபாய் மதிப்புள்ள இரண்டு வரி தகராறுகளில் காப்பீட்டாளருக்கு நிவாரணம் வழங்குவதற்கான வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் முடிவை எதிர்த்து எல்ஐசி மும்பை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது நினைவில் கொள்ளத்தக்கது.

## பண மோசடி வழக்கு : அமலாக்கத் துறை முன் கார்த்தி சிதம்பரம் ஆஜர்

புதுடெல்லி: ஜன. 3, மத்திய உள்துறை அமைச்சராக சிதம்பரம் இருந்தபோது, சீன நிறுவனத்தின் ஊழியர்களுக்கு விசா பெற்று தந்ததற்காக, வேதாந்தா குழும நிறுவனத்திடம் இருந்து ரூ.50 லட்சம் பெற்ற குற்றச்சாட்டு தொடர்பாக, அமலாக்கத்துறை விசாரணைக்கு காங்கிரஸ் எம்.பி. கார்த்தி சிதம்பரம் ஆஜரானார்.



மத்திய உள்துறை அமைச்சராக ப.சிதம்பரம் இருந்தபோது, மின்சாரம் மற்றும் எஃகு துறையில் புதிய உற்பத்தி மையங்கள் தொடங்குவதற்கு 'ப்ராஜெக்ட் விசா' விதிமுறைகள் கடந்த 2010-ம் ஆண்டு கொண்டுவரப்பட்டன. ஆனால் இந்த விசாக்களை மீண்டும் பயன்படுத்த முடியாது. எனினும், அரிய மற்றும் விதிவிலக்குள்ள விஷயங்களில் உள்துறை செயலாளர் அனுமதியுடன் மீண்டும் விசா வழங்குவது குறித்து பரிசீலிக்க விதிகள் உள்ளன. அப்போது வேதாந்தா குழுமத்தைச் சேர்ந்த தல்வாண்டி சபோ பவர் லிமிடெட் (டிஎஸ்பிஎல்) என்ற நிறுவனம் பஞ்சாபில் மின் உற்பத்தி மையத்தை சீன நிறுவனத்தின் உதவியுடன் அமைத்தது.

ஆனால் இந்தப் பணிகள் முடிய காலதாமதமானது. இதனால் சீன நிறுவனத்தின் 263 ஊழியர்களுக்கு ப்ராஜெக்ட் விசாவை மீண்டும் பயன்படுத்தும் அனுமதியை உள்துறை அமைச்சகத்திடம் இருந்து பெற்றுத் தர கார்த்தி சிதம்பரம் மற்றும் அவரது கூட்டாளி பாஸ்கர ராமன் ஆகியோரின் உதவியை வேதாந்தா குழுமத்தின் ஊழியர் ஒருவர் நாடியுள்ளார்.

ரூ.50 லட்சம்: இந்த ப்ராஜெக்ட் விசாவை மீண்டும் பயன்படுத்தும் அனுமதியை பெற்றுத் தந்ததற்காக கார்த்தி சிதம்பரத்துக்கு ரூ.50 லட்சம் வழங்கப்பட்டதாக சிபிஐ குற்றம் சுமத்தியது. இது தொடர்பாக சிதம்பரம் வீட்டில் கடந்த 2022ம் ஆண்டு சோதனை நடத்திய சிபிஐ அதிகாரிகள், பாஸ்கர ராமனை கைது செய்தனர்.

சிபிஐ புகார் அடிப்படையில் அமலாக்கத்துறை நிதிமோசடி வழக்கு பதிவுசெய்து சிவகங்கை எம்.பி கார்த்தி சிதம்பரத்திடம் விசாரணை நடத்தி வந்தது. இந்நிலையில் டெல்லியில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் கார்த்தி சிதம்பரம் நேற்று ஆஜரானார். முன்னதாக, கடந்த டிசம்பர் 23ம் தேதியும் கார்த்தி சிதம்பரம் அமலாக்கத்துறைவிசாரணையில் ஆஜரானார். அப்போது, அவரது வாக்குமூலத்தை அமலாக்கத்துறை அதிகாரிகள் பதிவு செய்தனர்.

இந்த விசாரணைக்குப் பின் பேட்டியளித்த கார்த்தி சிதம்பரம், "சீன ஊழியர் ஒருவருக்கு கூட விசாபெற்றுத்தர நான் ஒருபோதும் உதவவில்லை. இந்த வழக்கு என்னை தொந்தரவு செய்யும் நடவடிக்கை. எனது தந்தையை குறிவைத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அமலாக்கத் துறை விசாரணையில் சம்பந்தம் இல்லாத கேள்விகள் எல்லாம் கேட்கப்பட்டன" என கூறினார்.

## மணிப்பூரில் பாதுகாப்பு படையினர் மீது தாக்குதல் 4 போலீஸ் கமாண்டோக்கள், 1 பிஎஸ்எ:ஃப் வீரர் காயம்

இம்பால் : ஜன. 3, மணிப்பூரின் மோரே நகரில் நிகழ்ந்த புதிய வன்முறையில், தீவிரவாதிகள் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் 4 கமாண்டோ போலீஸாரும், ஒரு எல்லை பாதுகாப்பு படை வீரரும் காயமடைந்துள்ளனர். தௌபால் மாவட்டத்தில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை நடந்த புதிய வன்முறைச் சம்பவத்தில் 4 பேர் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு நேற்று இத்தாக்குதல் நிகழ்ந்துள்ளது.



மியான்மர் எல்லை அருகே இருக்கும் மோரே நகருக்கு பாதுகாப்பு படையினர் சென்ற போது அவர்களின் வாகனங்கள் மீது தீவிரவாதிகள் மறைந்திருந்து துப்பாக்கிச் சூடு நடத்தினர். பாதுகாப்பு படை வீரர்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த போது இந்தத் தாக்குதல் நடந்ததாக தகவல்கள் அறிந்தவர்கள் தெரிவித்தனர். காயம்பட்ட பாதுகாப்பு படை வீரர்கள் அசாம் ரைபில்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக, தௌபால் மாவட்டத்தில் உள்ள லிலாங் பகுதியில் அடையாளம் தெரியாத ஆயுதமேந்திய கும்பல் பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர். இதன்காரணமாக தௌபால், இம்பால் கிழக்கு, இம்பால் மேற்கு காக்சிங் மற்றும் பிஷ்ணுபூர் மாவட்டங்களில் மாநில அரசு மீண்டும் ஊரடங்கை அமல் செய்துள்ளது.

"இந்தச் சம்பவத்தை அரசு சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. குற்றவாளிகளை விரைந்து பிடிக்க மணிப்பூர் போலீஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். மக்கள் வன்முறையில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன். குற்றவாளிகள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்பதை உறுதி அளிக்கிறேன். அரசுக்கு ஒத்துழைப்பு கொடுக்கவும்" என அம்மாநில முதல்வர் பிரேன் சிங் தெரிவித்துள்ளார்.

மணிப்பூரில் மைதேயி சமூகத்தினருக்கும், குகி சமூகத்தினருக்கும் இடையே கடந்த மே 3-ம் தேதி மோதல் ஏற்பட்டது. இந்த கலவரத்தில் இதுவரை 180-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 700-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். பலர் வீடுகளை இழந்து அகதிகளாகி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாஜக கீழ்த்தரமான அரசியல் செய்கிறது அமைச்சர் மனோ தங்கராஜ் ஆதங்கம்

சென்னை : ஜன. 3-

''ஜனநாயகத்தை தகர்த்தெறிந்து சர்வாதிகாரத்தை ஏற்படுத்த மதவாதத்தை கையில் எடுத்து பாஜக செய்யும் கீழ்த்தர அரசியல் 2024-ல் ஜனநாயகமா, சர்வாதிகாரமா என்ற மிகப்பெரிய கேள்வியை நம்முன் நிறுத்துகிறது" என அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் மூத்த பத்திரிகையாளர் ஒருவரின் புத்தாண்டு வாழ்த்தை மேற்கோள் காட்டி பாஜகவை குற்றம்சாட்டியுள்ளார் தமிழக பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ். அவர் வெளியிட்டுள்ள பதிவில், ''ஆண்டாண்டு காலமாக சாதீயத்தின் பெயரில் அடிமைகளாய் இருந்த இந்திய சமூகம் ஜனநாயத்தின் மூலம் மக்களாட்சியை தோற்றுவித்து விடுதலையோடு வாழ்ந்து வருகிறது.

பல மதங்கள் இருந்தாலும், மதச்சார்பற்ற தன்மையோடு ஒற்றுமையை காத்து நிற்கிறது. ஜனநாயகத்தை தகர்த்தெறிந்து சர்வாதிகாரத்தை ஏற்படுத்த மதவாதத்தை கையில் எடுத்து பாஜக செய்யும் கீழ்த்தர அரசியல் 2024-ல் ஜனநாயகமா, சர்வாதிகாரமா என்ற மிகப்பெரிய கேள்வியை நம்முன் நிறுத்துகிறது" என குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரின் பதிவுக்கு தமிழக பாஜகவினர் பதிலடி கொடுப்பதுடன் அவர் குறிப்பிட்டது திராவிட மாடல் ஆட்சியைத்தான் என குறிப்பிட்டுள்ளனர்.

## தமிழகத்தில் 30–க்கும் மேற்பட்ட கட்டுமான நிறுவனங்களில் வருமான வரித் துறை சோதனை

சென்னை: ஜன. 3, சென்னை உட்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வருமான வரித் துறை சோதனை நடந்தது. வரி ஏய்ப்பு புகாரில் கட்டுமான நிறுவனங்களைக் குறிவைத்து இந்தச் சோதனை நடந்தது.



கடந்த ஆண்டு தமிழகத்தின் பல்வேறு இடங்களில் வருமான வரித் துறை சோதனை நடந்தது. குறிப்பாக, கடந்த ஆண்டு ஜூன் மாதம் அமைச்சர் செந்தில் பாலாஜி தொடர்புடைய இடங்களில் வருமான வரித் துறை மற்றும் அமலாக்கத் துறை சோதனை நடத்தப்பட்டது. இந்த விவகாரம் தமிழகத்தில் பெரிதாக பேசப்பட்ட நிலையில், இந்த ஆண்டு தொடக்கத்திலேயே தமிழகத்தில் பல இடங்களில் நேற்று மீண்டும் வருமான வரித் துறை சோதனை நடத்தப்பட்டது.

சென்னை, மதுரை, கோவை, ஈரோடு, சேலம், நாமக்கல், விருதுநகர் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள 30-க்கும் மேற்பட்ட இடங்கள் வருமான வரித் துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர். வரி ஏய்ப்பு தொடர்பாக இந்த இடங்களில் சோதனை நடத்தப்பட்டதாக முதல்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

சென்னையில் ஷெனாய் நகரில் உள்ள சிஎம்கே நிறுவனத்தில் வருமான வரித் துறை சோதனை நடத்தப்பட்டது. இந்த நிறுவனத்தின் கிளை நிறுவனங்களிலும் சோதனை நடத்தப்பட்டது. மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவிடத்தை கட்டியது இந்த நிறுவனம்தான் என்று சொல்லப்படுகிறது. பல முக்கிய கட்டிடங்களை கட்டிய இந்த நிறுவனம், வரி ஏய்ப்பு செய்த புகாரின் காரணமாக ஐ.டி ரெய்டு நடந்தது.

சென்னையில் மட்டும் கிட்டத்தட்ட 10 இடங்களில் சோதனை நடந்தது. ஈரோடு, கோவை, நாமக்கல் போன்ற பகுதிகளில் உள்ள கட்டுமான நிறுவனங்களுக்கு சொந்தமான இடங்களில் சோதனைகள் நடைபெற்றது. சிஆர்பிஎப் அதிகாரிகள் பாதுகாப்பு உடன் சோதனை நடத்தப்பட்டது.

# எண்ணூர் தொழிற்சாலையை தற்காலிகமாக முடியதை நிரந்தரமாக மூட வேண்டும் தமிழ்நாடு அரசுக்கு முத்தரசன் கோரிக்கை



சென்னை, ஜன,3

எண்ணூரில் அமோனியா வாயு கசிவு ஏற்படுத்திய கோரமண்டல் தொழிற்சாலையை நிரந்தரமாக மூட வலியுறுத்தி ஏழாம் நாளாக மீனவ மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எண்ணூர்பெரிய குப்பம் கோரமண்டல் தொழிற்சாலை நுழைவாயில் நடைபெற்று வரும் போராட்டத்திற்கு. இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன், மாநில துணை செயலாளர் வீரபாண்டியன் மாவட்ட செயலாளர் வெங்கடேசன் வேம்புலி, மாமன்ற உறுப்பினர் ரேணுகா, ஆகியோர் ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவ மக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

இதனை அடுத்து செய்தியாளர்களுடன் பேசிய முத்தரசன் எண்ணூர் பெரிய குப்பத்தில் அமைந்துள்ள கோரமண்டல் தொழிற்சாலை நீண்ட காலமாக செயல்பட்டு வருகிறது இந்த நிறுவனத்தில் இருந்து கடந்த டிசம்பர் 26 ஆம் தேதி அமோனியா கசிவு ஏற்பட்டு 60 க்கும் மேற்பட்டோர் மயக்கம் மூச்சுத்திணரல் போன்ற பாதிப்புகளால் மருத்துவமனையில் உள் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்கள்.

மாநில அரசு உடனடியாக கோரமண்டல உரஉற்பத்தி நிறுத்தி உற்பத்திய தொடரக்கூடாது என அறிவித்து உற்பத்தியை இன்று வரை நடைபெறவில்லை கோரமண்டல் நிறுவனத்திலிருந்து இப்போது மட்டுமல்ல தொடர்ச்சியாக அமோனியா பல சந்தர்ப்பங்களில் வெளியேறுகிறது.

இந்த பகுதி மக்களுக்கு பெரிய பாதிப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் மிகப்பெரிய பாதிப்புகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. மனித உயிர்களுக்கு பாதுகாப்பாற்ற நிலையில் உள்ளது ஆகவே இந்த தொழிற்சாலையை தற்காலிகமாக அல்ல நிரந்தரமாக மூட வேண்டும்.

தமிழக அரசு உடனடியாக மக்களுடைய கோரிக்கைகளை செவிமடுத்து கோரமண்டல் தொழிற்சாலையை தற்காலிகமாக மூடிய இருப்பதை நிரந்தரமாக மூட வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்

புதுவாயல் ஊராட்சியில் சிறு தொழில் பூங்கா அமைக்க

# எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட 12 பெண்கள் உள்பட 19 பேர் கைது



ஊத்துக்கோட்டை,ஜன. 3-

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், புதுவாயல் ஊராட்சியில் சர்க்கரை ஆலை அமைக்க 1994-ம் ஆண்டு இப்பகுதி விவசாயிகளிடம் இருந்து ஒரு சென்ட் நிலம் ரூ.1,400 என விலை நிர்ணயம்செய்து சுமார் 120 ஏக்கர் விளை நிலங்களை அரசு கையகப்படுத்தியது.

ஆனால், 30 ஆண்டுகள் ஆகியும் சர்க்கரை ஆலை அமைப்பதற்கான ஆரம்பகட்ட பணிகள் கூட தொடங்கவில்லை. இந்நிலையில்,தமிழக அரசு திடீரென இந்த 120 ஏக்கர் விளை நிலத்தில் தனியார் சிப்காட் சிறு தொழில் பூங்கா அமைப்பதாக கூறி அதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது.இதற்காக ஜேசிபி இயந்திரங்கள் மூலம் நிலத்தை சுத்தப்படுத்தும் பணி நடைபெறுகிறது.

இதனை அறிந்த விவசாயிகள் சர்க்கரை ஆலை அமைக்க வழங்கிய நிலத்தில் சிப்காட் சிறு தொழில் பூங்கா அமைக்க எதிர்ப்பு தெரிவித்தும், நிலத்தை 15 ஆண்டுகளுக்குள் பயன்படுத்தாவிட்டால் அதனை மீண்டும் சம்பந்தப்பட்ட விவசாயிகளிடமே வழங்க வேண்டும் என்ற விதி உள்ளது. எனவே,மேற்கண்ட நிலத்தை எங்களிடமே திருப்பி வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையும் மீறி நிலத்தை சிப்காட் தொழிற்சாலைக்கு வழங்குவதாக இருந்தால் தங்களுக்கு இழப்பீடு தொகை கூடுதலாக வழங்க வேண்டும். என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.தற்போது இப்பகுதியில் ஒரு சென்ட் நிலம் ரூ.2 லட்சமாக சந்தை மதிப்பு உள்ளது.

எனவே, எங்களிடம் கையகப்படுத்திய நிலத்தை மீண்டும் எங்களிடமே ஒப்படைக்க வேண்டும் அல்லது இழப்பீடு தொகையை கூடுதலாக வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து நிலத்தை சமன்படுத்த வந்த அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து கவரப்பேட்டை காவல் நிலைய போலீசார் போராட்டத்தில் ஈடுபட்ட 12 பெண்கள்,9 ஆண்கள் என மொத்தம் 19 பேரை கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களை கவரப்பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்துள்ளனர். இப்ப பிரச்சினையால் இப்பகுதியில் சுமார் 2 மணிநேரம் பதட்டமும், பரபரப்பும் நிலவியது.

# மயிலாடுதுறை மாவட்டத்தில் பொங்கல் கரும்பை அரசு நேரடியாக கொள்முதல் செய்ய விவசாயிகள் கோரிக்கை



சீர்காழி,ஜன. 3-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே காத்திருப்பு, செம்பதனிருப்பு, அல்லிவிளாகம், ராதாநல்லூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் சுமார் 100 ஏக்கரில் ஐந்து லட்சம் பொங்கல் கரும்புகள் பயிரிடப்பட்டுள்ளது.

கரும்பு நன்றாக விளைந்து அறுவடைக்கு தயாராக இருந்த நிலையில் பன்றிகள் தொல்லையால் அறுவடைக்கு தயாராக இருந்த கரும்புகள் வயலில் சாய்ந்து பாதிப்பை ஏற்படுத்தியது.

ஆட்கள் சம்பளம், உரங்களின் விலை உயர்வு என ஏக்கருக்கு ரூபாய் ஒரு லட்சம் ரூபாய் வரை செலவு செய்திருந்த நிலையில், சாய்ந்த கரும்புகளை தூக்கி நிறுத்தி கட்டுவதற்கு ஏக்கருக்கு ரூபாய் முப்பதாயிரம் வரை கூடுதல் செலவு செய்து கரும்பை பாதுகாத்து வைத்துள்ளனர்.

மேலும் தங்களுக்கு அரசு பொங்கல் பரிசு தொகுப்பிற்கு கொள்முதல் செய்யும் கரும்பை இடைதரகர்கள் மூலமாக கொள்முதல் செய்யாமல் அரசு நேரடியாக கூட்டுறவு துறை மூலமாக கொள்முதல் செய்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த தமிழக முதல்வருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் பொங்கல் கரும்பு விவசாயிகளுக்கு அரசு எவ்வித கடன்களும், காப்பீடு செய்வதற்கு வழி இல்லாமல் தவித்து வருவதாகவும் வரும் காலங்களில் அரசு மற்ற விவசாயத்தை போல அதற்குரிய மானியத்துடன் கூடிய விதை கரும்பு வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

# சென்னையில் புத்தகக் காட்சி இன்று தொடக்கம்



சென்னை : ஜன. 3, சென்னை நந்தனத்தில் 47வது சென்னை புத்தகக்காட்சி இன்று தொடங்கி வரும் 21ம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதனை தமிழக முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் புத்தகப் பிரியர்களுக்காக புத்தகக்காட்சி நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு புத்தகக்காட்சி இன்று தொடங்கி ஜனவரி 21ம் தேதி நடைபெறவுள்ளது. 1000 அரங்குகளில் எழுத்தாளர்கள் எழுதிய படைப்புகள் பொதுமக்கள் மற்றும் புத்தக பிரியர்களின் பார்வைக்கு வைக்கப்பட உள்ளது.

வேலை நாட்களில் பிற்பகல் 2 மணி முதல் இரவு 8.30 மணி வரை புத்தகக் காட்சி நடைபெறும். விடுமுறை நாட்களில் காலை 11 மணிக்கு தொடங்கி இரவு 8.30 மணி வரை நடைபெறவுள்ளது. மொத்தம் 19 நாட்கள் புத்தகக் காட்சி நடைபெறுகிறது. ஒவ்வொரு நாள் மாலையிலும் சிந்தனை அரங்கில் தமிழகத்தின் தலைச்சிறந்த அறிஞர்கள், எழுத்தாளர்களின் உரைவீச்சுக்கள் இடம் பெறுகிறது.

புத்தகக் காட்சியை பார்வையிட நுழைவு கட்டணமாக ரூ.10 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறும் விழாவில் தமிழக முதல்வர் ஸ்டாலின் கலந்துகொண்டு புத்தகக்காட்சி தொடங்கி வைக்கிறார். இந்த விழாவில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள 6 படைப்பாளர்களுக்கு கலைஞர் பொற்கிழி விருது, சிறந்த படைப்பாளர் மற்றும் நூலர் உள்ளிட்ட விருதுகளை முதல்வர் வழங்கி சிறப்புரையாற்ற உள்ளார்.



▶ சென்னை, செங்குன்றம் போக்குவரத்து (டிராபிக்) காவல்துறை சார்பில் செங்குன்றம் கூட்ரோடு ரவுண்டானா போலீஸ் பூத் அருகில் புத்தாண்டு வருட பிறப்பு துவக்க நாளில் இரவு 12 மணிக்கு ஆவடி காவல் ஆணையர் (கமிஷனர்) சங்கர் முன்னிலையில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. உடன் காவல் உதவி ஆய்வாளர் ராஜா ராபர்ட், நாரவாரிக் குப்பம் பேரூராட்சி தலைவர் தமிழரசி குமார் மேலும் செங்குன்றம் போக்குவரத்து ட்ராபிக் ஆய்வாளர் சோபிதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பொது மக்களிடையே விபத்து இல்லா பகுதியாக மாற வேண்டும் என்றும் தலைக்கவசம் அணிய வேண்டும் என்றும் குடிபோதையில் வாகனத்தை ஓட்டக்கூடாது என்றும் டிராபிக் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.



▶ ஆங்கில புத்தாண்டு முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா.இளையஅருணாக்கு சென்னை இராயபுரம் மேற்கு 48வது வட்டச் செயலாளர் இரா. பாலன், சால்வை அணிவித்து புத்தாண்டு வாழ்த்துகள் கூறினார்.பின்னர் 48 வது வட்டத்தில் புத்தாண்டு முன்னிட்டு பொதுமக்களுக்கு காலை உணவுகளை வட்ட செயலாளர் இரா.பாலன் வழங்கினார்



▶ காரைக்கால், வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் நேனோ டி.ஏ.பி யை டிரோன் மூலம் நெற்பயிருக்கு பயன்படுத்தும் முறை பற்றிய செயல்விளக்கம் காண்பிக்கப்பட்டது. மாதூர், வேளாண் அறிவியல் நிலையத்தில் ஹைதராபாத்தில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் - மத்திய வறண்ட நில வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் தேசிய பருவநிலை மாற்றத்திற்கு உகந்த மின் தன்மையுள்ள வேளாண் திட்டத்தின் (நிக்ரா) கீழ் பேட்டை கிராமத்தில் வேளாண் அறிவியல் நிலையத்தின் முதல்வர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் சீ. ஜெயசங்கர் வழிகாட்டுதலின்படி நேனோ டி.ஏ.பி யை டிரோன் மூலம் நெற்பயிருக்கு பயன்படுத்தும் முறை பற்றிய செயல்விளக்கம் நேற்று விவசாயிகளுக்கு காண்பிக்கப்பட்டது. தொழில்நுட்ப உரையாற்றிய முனைவர். வி. அரவிந்த் தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல்) நேனோ டி.ஏ.பி யை டிரோன் மூலம் பயன்படுத்தும் முறை, அளவு மற்றும் அதன் பயன்கள் ஆகியவற்றை விவசாயிகளிடையே விரிவாக எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் சுமார் 30 க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர்.



▶ காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் எம்.இராஜேந்திரன் ஆலோசனை படியும்ம் உத்திரமேரூர் ஒன்றிய செயலாளர் அழிசூர் வி. கன்னியப்பன் மற்றும் பேரூர் செயலாளர் எஸ் .ஐயப்பன் வழிகாட்டுதலின் படியும் உத்திரமேரூர் ஒன்றியம் மருத்துவான்பாடி ஊராட்சி நாகமேடு கிளை சார்பாக மறைந்த தேமுதிக தலைவர் கேப்டன் விஜயகாந்த் உருவப்படத்திற்க்கு மலர்தூவி மரியாதைசெய்து கண்ணீர் அஞ்சலி செலுத்தப்பட்டது இதில் ஒன்றிய அவை தலைவர் இளைய பெருமாள் ஒன்றிய பொருளாளர் சந்திரசேகர் மாவட்ட மகளிரணி செயலாளர் செல்வி பரசுராமன் ஒன்றிய துணை செயலாளர் மோகனராமன் பேரூர் கழக பொருளாளர் சீனிவாசன் பேரூர் கழக துணைச் செயலாளர் பச்சையப்பன் மாவட்ட பிரதிநிதி ரமேஷ் மாவட்ட மகளிரணி துணை செயலாளர் காயத்ரி ஒன்றிய கேப்டன் மன்ற துணை செயலாளர் சிவா நாகமேடு கிளை செயலாளர் பன்னீர் செல்வம், பரசுராமன்,பெருமாள்,சேதுராமன்,வேம்புலி, கிருஷ்ணன்,சிலம்பரசன்,தயாளன் மற்றும் ஊர் பொது மக்கள்



▶ காரைக்கால் மாவட்ட திமுக வழக்கறிஞர் அணி மாநில அமைப்பாளர் இரா. வெற்றிச்செல்வன்க்கு மாநில கட்சி அமைப்பாளர் . சட்ட மன்ற உறுப்பினர் நாஜிம், தலைமை செயற்குழு உறுப்பினர் நாக தியாகராஜன், பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தபோது ... உடன் கட்சி நிர்வாகிகள், தொகுதி நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்கள் ..!

# பயிர் காப்பீட்டுத் தொகை வழங்க வலியுறுத்தி விவசாயிகள் சாலை மறியல் போராட்டம்



தரங்கம்பாடி, ஜன. 03-

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், கொத்தங்குடி ஊராட்சி, நல்லாடை முக்கூட்டில் கடந்த 2022- 2023 ஆண்டிற்கான பயிர் காப்பீட்டுத் தொகை வழங்க வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவிளையாட்டம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்திற்கு உட்பட்ட நல்லாடை, கொத்தங்குடி, அரசூர், எரவாஞ்சேரி, திருவிளையாட்டம் உள்ளிட்ட 15 க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் சுமார் 2500 ஏக்கர் பரப்பளவில் விவசாயம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த 2022-2023 ஆம் ஆண்டு மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உளுந்து, பயிர் மற்றும் நெற்பயிர்களுக்கு காப்பீட்டுத் தொகை வழங்காததை கண்டித்து நல்லாடை முக்கூட்டில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் தலைமையில், மாவட்ட செயலாளர் சீனிவாசன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் சிம்சன், விஜயகாந்த், வெண்ணிலா உள்ளிட்ட விவசாயிகள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன், வேளாண்மை உதவி இயக்குனர் சுப்பையன், பெரம்பூர் காவல் ஆய்வாளர்கள் சந்திரா, ஆகியோர் விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் பயிர் காப்பீட்டு தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்ததன் பேரில் சாலை மறியல் விளக்கிக் கொள்ளப்பட்டது.

இதனால் பொறையார், காரைக்கால், நாகப்பட்டினம், மங்கைநல்லூர், செம்பனார்கோவில், மயிலாடுதுறை செல்லும் வழித்தடங்களில் போக்குவரத்து சுமார் 1மணி நேரம் பாதிக்கப்பட்டது.

விசிக தலைவர் தொல்.திருமாவளவன் தலைமையில்

# இஸ்லாமிய ஜனநாயக பேரவையின் மாநில செயலாளர் திருமண விழா



காட்டுமன்னார்கோயில் ஜன.03

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயிலில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் இஸ்லாமிய ஜனநாயக பேரவையின் மாநில செயலாளர் அப்துல்ரகுமான் இல்ல திருமண விழாவில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினருமாகிய தொல் திருமாவளவன் தலைமையில் நடைபெற்றது மணமக்கள் முகமது யாசிர், ஆப்ரின்பானு தம்பதியினரை வாழ்த்தி பேசினார்.

திருமண விழாவில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் காதர் முகைதீன்,கடலூர் மாவட்ட அரசு காஜி நூருல் அமீன் ஹஜ்ரத், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, காட்டுமன்னார்கோயில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச் செல்வன், மனிதநேய மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் மணப்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அப்துல் சமது, காங்கிரஸ் கட்சியின் மாநில துணைத்தலைவர் முனைவர் மணிரத்தினம், மனிதநேய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் ஹாருண்ரசீது, திமுக ஒன்றிய செயலாளர் முத்துசாமி ராமலிங்கம் காட்டுமன்னார்கோயில் ஒன்றிய பெருந்தலைவர் நிஜார் அகமது தமிழக அரசு பனை வாரிய உறுப்பினர் அக்ரி .பசுமைவலன் மாவட்ட செயலாளர் மணவாளன் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் மணமக்களை வாழ்த்தி பேசினர் விழாவில் திமுக,காங்கிரஸ், முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, விடுதலை சிறுத்தைகள் நிர்வாகிகள் தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர் வாழ்த்தினார்கள்

# பொதுமக்களுடன் கேக் வெட்டி எஸ்.பி. புத்தாண்டு கொண்டாட்டம்



வேலூர் ஜன.3-

புத்தாண்டை யொட்டி வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பொதுமக்களுடன் கேக் வெட்டி கொண்டாடினார். நாடு முழுவதும் புத்தாண்டு பண்டிகை கொண்டாடப்பட்டு வரும் நிலையில் வேலூர் மாவட்டத்திலும் ஆலயங்கள் மற்றும் பிரபல தனியார் ஹோட்டல்களிலும் ஆடல் பாடல்களுடன் 2024 புதிய ஆண்டை வரவேற்றனர்.

எந்த ஒரு அசம்பாவிதமும் ஏற்படாமல் இருக்க இரவு 9 மணி முதல் வேலூர் மாவட்ட முழுவதும் காவல்துறையினர் சுமார் 940 மேற்பட்டோர் சோதனை சாவடிகள் அமைத்து பல்வேறு இடங்களில் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர்.

மேலும் மாவட்டம் முழுவதும் விதிமுறையை மீறி சாலையில் சென்ற இரு சக்கர வாகனங்கள் மற்றும் அத்துமீறும் வாகனங்களை பறிமுதல் செய்து ஒழுங்கு நடவடிக்கையில் காவல்துறையினர் ஈடுபட்டிருந்தனர்

இந்நிலையில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மணிவண்ணன் பொதுமக்களுடன் இணைந்து ஆங்கில புத்தாண்டு பிறந்ததை ஒட்டி வேலூர் பழைய பேருந்து நிலையத்திலும் காட்பாடி சித்தூர் பேருந்து நிலையத்திலும் நின்றிருந்த பொதுமக்கள், சாலை வழியாக வந்த மக்கள் மற்றும் பேருந்து ஓட்டுனர், ஆட்டோ ஓட்டுநர்கள், என அனைவருடன் இணைந்து சாலையில் கேக் வெட்டி அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி புத்தாண்டு வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

எண்ணூர் கோரமண்டல் உர தொழிற்சாலையை நிரந்தரமாக மூடாவிட்டால்

# அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் போராட்டம் முன்னாள் எம்எல்ஏ அறிவிப்பு



சென்னை ,ஜன. 3-

சென்னை எண்ணூர் பெரியகுப்பம் பகுதியில் செயல்பட்டுவரும் கோரமண்டல் உரத் தொழிற்சாலையை நிரந்தரமாக மூட வலியுறுத்தி ஏழாவது நாளாக சின்ன குப்பம் பெரிய குப்பத்தை சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட பெண்கள் ஆண்கள் சிறுவர்கள் என போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பெரியகுப்பம் கோரமண்டல் தொழிற்சாலை நுழைவாயில் முன்பு நடைபெற்று வரும் போராட்டத்திற்கு பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் சமூக ஆர்வலர்கள் தங்களது ஆதரவை தெரிவித்து மக்களுக்காக ஆதரவாக தொழிற்சாலை மூடச் சொல்லி மக்களை பேசி வருகின்றனர்.

இந்நிலையில் திருவொற்றியூர் அதிமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.குப்பன், 7 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கே.கார்த்திக் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவ மக்களை சந்தித்து அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

மீனவ மக்களிடம் பேசிய பொழுது கோரமண்டல் தொழிற்சாலை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் தொழிற்சாலையினால் உயிருக்கு பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது இனிவரும் காலங்களில் ஆபத்து விளைவிக்கும் இந்த தொழிற்சாலை இப்பகுதியில் இருக்கக் கூடாது என வலியுறுத்தினார். இதனை அடுத்து செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே. குப்பன் தமிழ்நாடு அரசு தற்காலிகமாக மூடி இருக்கும் கோரமண்டல் தொழிற்சாலையை நிரந்தரமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

கடற்கரை ஒட்டி வசிக்கும் மீனவ மக்களின் உயிருக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் ஏற்பட்டு இருப்பதாகவும் எந்த நேரத்திலும் உயிர் பறிபோகும் நிலை இருப்பதினால் உடனடியாக மூட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

தொழிற்சாலையை நிரந்தரமாக மூடாவிட்டால் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி தலைமையில் 33 மீனவ கிராம மக்களுடன் போராட்டத்தில் ஈடுபட போவதாக தெரிவித்தார்.மேலும் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களுக்கும் சிபிசிஎல் எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினை குறித்து வரும் சட்டமன்ற கூட்டத்தொடரில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி வலியுறுத்த இருப்பதாக தெரிவித்தார்.

# நீட் எதிர்ப்பு கையெழுத்து இயக்கத்திற்கு தடை விதிக்க முடியாது : உச்ச நீதிமன்றம்



புதுடில்லி : ஜன. 3, இக்கால மாணவர்கள் சிறந்த அறிவாளிகள் எனவும், அவர்கள் விரும்பி கையெழுத்திடுவதை எப்படி தடுக்க முடியும் எனவும் கேள்வி எழுப்பியுள்ள உச்ச நீதிமன்றம், நீட் தேர்வு விலக்கு கோரி திமுக நடத்தும் கையெழுத்து இயக்கத்திற்கு எதிரான மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

நாடு முழுவதும் மருத்துவப் படிப்புகளுக்கு, மத்திய அரசு சார்பில் நீட் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் நீட் தேர்வு அச்சம் காரணமாக 22 மாணவர்கள் இதுவரை உயிரிழந்துள்ள நிலையில், நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி தமிழ்நாடு அரசு சார்பில் பல்வேறு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக நீட் தேர்வை ரத்து செய்ய மத்திய அரசை வலியுறுத்தும் வகையில், 'நீட் விலக்கு-நம் இலக்கு' என்ற பெயரில் திமுகவின் இளைஞர் அணி சார்பில் கையெழுத்து இயக்கம் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த அக்டோபர் மாதம் இந்த இயக்கத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்திருந்தார். தமிழ்நாடு முழுவதும் 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துக்களை பெற வேண்டும் என்ற குறிக்கோளுடன் துவங்கப்பட்ட இந்த கையெழுத்து இயக்கம் தற்போது முடிவடைந்துள்ள நிலையில், விரைவில் தமிழ்நாடு அரசு தரப்பில் குடியரசுத் தலைவரிடம் இந்த கையெழுத்து பிரதிகள் ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் நீட் கையெழுத்து இயக்கத்திற்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. வழக்கறிஞர் எம்.எல்.ரவி என்பவர் தொடர்ந்த ரிட் மனு உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் சூர்யகாந்த் மற்றும் கே.வி. விஸ்வநாதன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், "நீட் தேர்வு தொடர்பாக மத்திய அரசு இயற்றிய சட்டத்தை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. அதற்கு எதிராக மாநில அமைச்சர் போராட்டம் அறிவிக்க முடியாது. கையெழுத்து இயக்கம் தொடர்பாக அரசு எந்த அறிவிப்பும் வெளியிடாத நிலையில், இதை அரசின் கொள்கையாக கருத முடியாது. நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கம் பள்ளிகளில் நடத்தப்படும் நிலையில், இதில் கையெழுத்திட மாணவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். மேலும் இந்த கையெழுத்து இயக்கத்தினால் நீட் தேர்வுக்கு தயாராக வேண்டாம் என்ற எண்ணம் மாணவர்கள் மனதில் ஏற்படும். படிப்பிலிருந்து மாணவர்களின் கவனம் திசை திரும்பும். எனவே பள்ளிகளில் கையெழுத்து இயக்கம் நடத்த அனுமதிக்க கூடாது. கையெழுத்து இயக்கத்திற்கு தடை விதிக்க வேண்டும். இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் சரியான வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க வேண்டும்" என வாதிட்டார்.

இந்த வாதங்களை ஏற்க மறுத்த நீதிபதிகள், "கையெழுத்து இயக்கத்தை மக்கள் விரும்புகிறார்கள் என்றால் அதனை எப்படி தடுக்க முடியும்?. குறிப்பாக இக்கால மாணவர்கள் சிறந்த அறிவாளிகள். அவர்களுக்கு அனைத்தும் தெரியும். அவர்கள் விரும்பி கையெழுத்து இடுகிறார்கள் என்றால் அதை எப்படி தடுக்க முடியும்? நாம் எதனையும் குறிப்பிட்டு தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் தலையிட விரும்பவில்லை" எனக்கூறி மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# 10 நாளில் ரூ.543 கோடிக்கு மதுபானம் விற்பனை : கேரளா அரசு தகவல்



கேரளா : ஜன. 3, கேரளாவில் கிறிஸ்துமஸ் மற்றும் தொடர் விடுமுறை கொண்டாட்டங்களை ஒட்டி கடந்த 10 நாட்களில் மட்டும் ரூ.543 கோடிக்கு மது விற்பனை நடைபெற்றுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

கேரள மாநிலத்தில் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு ஆகிய பண்டிகைகளை ஒட்டி மதுபான விற்பனை அதிகரித்து காணப்பட்டது. குறிப்பாக கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி கடந்த 24ம் தேதி மட்டும் 70.73 கோடி ரூபாய்க்கு மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மூன்று நாட்கள் நடைபெற்ற மது விற்பனையில் சாலக்குடி பகுதியில் மட்டும் 63.85 லட்சம் ரூபாய்க்கு மதுபானங்கள் விற்பனையாகியுள்ளது.

இதன் மூலம் மாநிலத்திலேயே மது விற்பனையில் சாலக்குடி முதலிடம் பிடித்துள்ளது. இதேபோல் சங்கனாச்சேரியில் 62.87 லட்சம் ரூபாய்க்கும், இருஞ்சலகுடாவில் 62.31 லட்சம் ரூபாய்க்கும் மதுபானங்கள் விற்பனையாகியுள்ளது. இதனிடையே கேரளாவில் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு பண்டிகைகளை ஒட்டி கடந்த 10 நாட்களில் ரூ.543 கோடிக்கு மது விற்பனை ஆகி உள்ளதாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட கூடுதலாக 27 கோடி ரூபாய் அதிகமாகும்.

புத்தாண்டை ஒட்டி கடந்த 31ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று 94.54 கோடி ரூபாய்க்கு மதுபானங்கள் விற்பனை ஆகி உள்ளது. கேரளாவில் மதுபானங்கள் மீதான வரிகள் 250 சதவீதம் உள்ள நிலையில் அந்த தொகை மாநில அரசுக்கே செல்கிறது. இதன் காரணமாக 543.13 கோடி ரூபாய்க்கு மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ள நிலையில் மாநில அரசுக்கு 490 கோடி ரூபாய் வருமானமாக கிடைத்துள்ளது. இதற்கு முன்னதாக ஓணம் பண்டிகையின் போது கேரள மாநில மதுபான விற்பனை கழகம் 759 கோடி ரூபாய்க்கு பத்து நாட்களில் மதுபானங்களை விற்பனை செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### சீர்காழி அருகே சாலை அமைக்க எதிர்ப்பு தெரிவித்து

# சாலையில் புதைக்கப்பட்ட உடல்கள் சாலை போடும் பணி தற்காலிகமாக நிறுத்தம்



சீர்காழி, ஜன,3

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா ஆச்சாள்புரம் ஊராட்சிக்கு உட்பட்ட கீழஅகரம் கிராமத்தில் சுடுகாடு பகுதியில் சாலை அமைப்பது தொடர்பான பிரச்சினை குறித்து அமைதி பேச்சுவார்த்தை கூட்டம் நேற்று வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் நடைபெற்றது.

அப்போது ஆச்சாள்புரம் கீழஅகரம் பகுதியை சேர்ந்த கிராமவாசிகள், தாங்கள் பல ஆண்டுகளாக இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யும் கடுகாட்டின் மீது சாலை அமைக்க கூடாது என்றும், சுடுகாட்டு பகுதிக்கு சுற்றுசுவர் அமைத்து தரவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இது குறித்து அரசு தரப்பில் கூறுகையில் அப்பகுதியில் ஏற்கனவே சாலை அமைந்து இருந்ததால் தற்போது முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அரசின் சார்பாக நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டது எனவும், சாலை பணிகள் தொடங்கும் போது பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆட்சேபனையும் வரவில்லை. ஆகையால் பணிகள் தொடரப்பட்டது.

அவ்வாறு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சூழலில், இறந்தவரின் உடலை ஏற்கனவே சாலை அமைக்கப்பட்டதன், ஓரம் அதாவது அப்பகுதி மக்களின் சுடுகாட்டு பகுதியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது போன்ற விவரங்களை தெரிவித்து, தற்போது இந்த சாலையை அமைக்க ஆட்சேபனை இருப்பதை முன்னரே தெரிவித்திருந்தால், பொதுமக்களின் கோரிக்கையின் அடிப்படையில் இந்த பணிகளை தொடர்ந்து செய்வது தொடர்பாக பரீசீலித்திருக்கலாம், இருப்பினும் பொதுமக்களின் கோரிக்கையின் அடிப்படையில் அரசு செயல்படுவதால், அப்பகுதி பொதுமக்களால் ஆட்சேபனை உள்ளதை கருத்தில் கொண்டு, சாலை அமைக்கும் பணியினை தற்காலிகமாக நிறுத்தி வைத்துப்பதாக தெரிவித்துள்ளார்.

மேலும் சுடுகாடு பகுதியில் அமைந்துள்ள வாய்க்கால் கரையினை அளவீடு செய்து சுற்றுசுவர் அமைத்து அதில் அடிப்படை வசதிகளை செய்து கொடுத்திட தொடர் நடவடிக்கை மேற்கொள்ள ஆதிராவிடர் தனி வட்டாட்சிவருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

# இந்துக்கள் சிங்கம்போல சிலிர்த்து எழ வேண்டும் – சடகோப ராமானுஜ ஜீயர் சீற்றம்



*ஸ்ரீவில்லிபுத்தூர் : ஜன. 3, இந்து மதத்தை தவறாக பேசுபவர்களைக் கண்டு இந்துக்கள் சிங்கம்போல் சிலிர்த்து எழ வேண்டும் என ஸ்ரீவில்லிபுத்தூர் சடகோப ராமானுஜ ஜீயர் பேசியுள்ளார்.*

*பொதுவாக இந்து மதம் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துக்கள் யாராவது தெரிவித்தால் அதற்கு முதல் ஆளாக பதிலடி கொடுப்பவர் சடகோப ராமானுஜர். திமுகவைச் சேர்ந்த ஆ.ராசா போன்றவர்கள் சர்ச்சை கருத்துக்கள் தெரிவித்த போதும் இவர் கடுமையான பதில் கொடுத்தார்.*

*ஆண்டாள் குறித்து வைரமுத்து தவறாக சித்தரித்ததாக சர்ச்சைகள் எழுந்தபோது வைரமுத்துவை எதிர்த்து உண்ணாவிரதமும் இருந்தார். அப்போது "இறை நம்பிக்கைக்கு எதிராகயார்பேசினாலும், இனி அமைதியாக போகமாட்டோம். கல் எறியவும், சோடா பாட்டில் வீசவும் எங்களுக்கும் தெரியும்" என்ற இவரது பேச்சு சமூகத்தில் கடும் விமர்சனத்திற்குள்ளானது. இந்த நிலையில் தான் தற்போது இந்துக்கள் சிலிர்த்து எழ வேண்டும் என்று அவர் பேசியுள்ளார்.*

*ஸ்ரீவில்லிபுத்துாரில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை நடந்த திருப்பாவை முற்றோதுதல் மாநாட்டில் கலந்து கொண்ட ஸ்ரீவில்லிபுத்தூர் ஜீயரான சடகோப ராமானுஜ ஜீயர், இந்துக்களை விமர்சிப்பவர்கள் குறித்து கடுமையாக பேசினார். "ஆண்டாள் தாயார் இல்லையெனில் இந்த உலகமே கிடையாது. சனாதன தர்மம் நிலைத்து நிற்கும் என்பதற்கு இந்த மாநாடு ஒரு எடுத்துக்காட்டு.*

*இன்று கோயில் வழிபாடுகளில் பெண்கள் அதிகளவில் பங்கேற்பது சனாதன தர்மத்தின் எழுச்சி ஆகும். எந்த மதத்தையும் தாழ்வாகவோ, இழிவாகவோ பேசக் கூடாது என்பது எங்கள் கருத்து. அதே நேரம் சனாதன தர்மத்தையோ, இந்து மதத்தையோ, இழிவாக பேசுபவர்கள் மீது மத்திய அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*சமீப காலமாக இந்து மதத்தையும், கடவுள்களையும் தப்பு தப்பாக பேசுபவர்கள் அதிகரித்து வருகின்றனர். இதைக்கண்டு இந்துக்கள் விழித்து, சிலிர்த்து எழ வேண்டும்" என்று அவர் பேசினார்.*

# திமுக அமைச்சர்கள் மீதான வழக்குகள் : விசாரிக்க தொடங்கினார் நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ்



சென்னை : ஜன. 3, தமிழக அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், ஐ.பெரியசாமி மற்றும் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம், முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி ஆகியோர் மீதான சொத்துக்குவிப்பு வழக்குகளை நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் நேற்று முதல் விசாரிக்க தொடங்கினார்.

தமிழக அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் தொடர்பான வழக்குகளை தாமாக முன்வந்து சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் விசாரித்தார். இந்த நிலையில், சுழற்சி முறையில் மதுரை உயர் நீதிமன்றத்துக்கு அவர் மாற்றப்பட்டார். இதனைத் தொடர்ந்து தற்போது மீண்டும் அவர் சென்னை உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டு, வழக்குகளை விசாரிக்க உள்ளார்.

ஆனந்த் வெங்கடேஷ் தாமாக முன்வந்து எடுத்த பொன்முடி மீதான சொத்துக்குவிப்பு வழக்கை ஜெயச்சந்திரன் விசாரித்து, தண்டனையை உறுதி செய்தார். இந்த நிலையில், சென்னை உயர் நீதிமன்றத்தில் எம்.பி., எம்எல்ஏக்கள் மீதான வழக்குகளை நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் மீண்டும் விசாரணை நடத்த உள்ளார்.

தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுக்கப்பட்ட தற்போதைய அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் தொடர்பான வழக்குகள் ஆனந்த் வெங்கடேஷ் முன்பு நேற்று முதல் பட்டியலிடப்பட உள்ளதால் தமிழக அரசியலில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# கிளாம்பாக்கம் பேருந்து நிலையதில் உள்ள குறைகள் அனைத்தும் பொங்கலுக்கு பிறகு சரி செய்யப்படும் : அமைச்சர் சேகர்பாபு பேட்டி



சென்னை : ஜன. 3-

கிளாம்பாக்கம் பேருந்துநிலையதில் உள்ள குறைகள் அனைத்தும் பொங்கலுக்கு பிறகு சரி செய்யப்படும் என்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமைச்சர் சேகர்பாபு, 86 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள கிளாம்பாக்கம் பேருந்துநிலையம் மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து 48 மணி நேரம் தான் ஆகிறது. நகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்க தான் கிளாம்பாக்கம் பேருந்துநிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை மாலை நானும், துறையின் உறுப்பினர், செயலர்கள் ஆகியோர் முழுமையாக கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை சுற்றி பார்த்தோம்.

ஒருசில ஊடகங்களில் பேருந்து நிலையத்தில் தண்ணீர் வரவில்லை என்று கூறினார்கள். நாங்கள் ஆய்வு செய்ததில் அனைத்திலும் தண்ணீர் வருகிறது. அதேபோல் கழிப்பறை பராமரிப்பு இல்லை என்றார்கள். நாங்கள் அனைத்து கழிப்பறைக்கும் சென்றுவிட்டு திரும்பினோம். அனைத்து கழிப்பறைகளும் சுத்தமாக பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கின்றன. ஏற்கனவே கோயம்பேட்டில் இருந்து தென் மாவட்ட பேருந்துகள் இயங்கிய நிலையில், இப்போது கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்கப்படுவதால் கூடுதல் கட்டணத்தை திருப்பி தர வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது.

முதலில் அதனை வங்கி கணக்கில் செலுத்துவதாக திட்டமிட்டிருந்தோம். அதன் பிறகு பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படுகிறது என்பதை உணர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்பேரில் அந்த இடத்திலேயே நடத்துனர் வாயிலாக அதற்குண்டான பணத்தை திரும்ப செலுத்தி இருக்கின்றோம் என்று தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அமைச்சர் சேகர்பாபு, பேருந்து நிலையத்தை பராமரிப்பதற்கு புனேவைச் சேர்ந்த தனியார் நிறுவனத்துக்கு டெண்டர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் பயணிகள் வசதிக்காக கூடுதலாக பேட்டரி கார் ஏற்பாடு செய்யப்பட உள்ளது. நேற்று முன்தினம் திங்கள்கிழமை இரவு மட்டும் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் இருந்து 10 ஆயிரம் பயணிகள் பயணித்துள்ளனர். விரைவில் பேருந்து நிலையத்திற்கு தேவையான அனைத்து பணியாளர்களையும், துறையின் சார்பில் பொறுப்பான அதிகாரியையும் நியமிக்கவுள்ளோம். கிளாம்பாக்கம் பேருந்துநிலையதில் உள்ள குறைகள் அனைத்தும் பொங்கலுக்கு பிறகு சரி செய்யப்படும். பேருந்து நிலையத்தில் தேவைப்படும் பட்சத்தில் அம்மா உணவகம் அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

# சேலத்தில் புதுமணப்பெண் கிணற்றில் குதித்து தற்கொலை : காப்பாற்ற முயன்ற கணவனும் பலி



சேலம் : ஜன. 3, புதுமணப்பெண் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்ட நிலையில் காப்பாற்ற முயன்ற கணவனும் பலியான சம்பவம் சேலத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சேலம் மாவட்டம், வாழப்பாடி அருகே துக்கியாம்பாளையம் ஊராட்சி, மாரியம்மன் புதூர் கிராமத்தை சேர்ந்தவர் கதிர்வேல் மகன் அருள்முருகன் (27). கட்டிடத் தொழிலாளியான இவருக்கும், சந்தரபிள்ளைவலசு ஊராட்சி, பெரியார் சமத்துவபுரத்தைச் சேர்ந்த கூலித்தொழிலாளி சந்தோஷ் என்பவரின் மகள் அபிராமி (19) என்பவருக்கும், கடந்த 3 மாதங்களுக்கு முன்பு திருமணமானது.

மகிழ்ச்சியோடு வாழ்க்கையை ஆரம்பித்த இவர்களுக்குள், புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் திங்கள்கிழமை இரவு வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் மனமுடைந்த அபிராமி, தற்கொலை செய்து கொள்வதற்காக, நள்ளிரவு 12 மணியளவில் அருகிலுள்ள விவசாயி மாணிக்கம் என்பவரது தோட்டத்திலுள்ள கிணற்றில் குதித்துள்ளார். இதனைக்கண்ட இவரது கணவர் அருள்முருகன் மனைவியை காப்பாற்ற அதே கிணற்றில் குதித்துள்ளார். இதில் இருவரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதுகுறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற வாழப்பாடி போலீசார், தீயணைப்பு படையினர் துணையுடன் 1 மணி நேரத்திற்கு மேல் போராடி இருவரது உடல்களையும் மீட்டு, பிரேதபரிசோதனைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இச்சம்பவம் குறித்து வாழப்பாடி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். புதுமணப்பெண் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்ட நிலையில் காப்பாற்ற முயன்ற கணவனும் பலியான சம்பவம் சேலத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

### ஊழல் குற்றச்சாட்டில் கைது

# சேலம் பெரியார் பல்கலைக்கழக துணை வேந்தரை பணி நீக்கம் செய்யவும் – ராமதாஸ்



*சென்னை : ஜன. 3, ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்ட பெரியார் பல்கலைக்கழக துணை வேந்தர் ஜெகநாதனை பணியிடை நீக்கம் செய்ய வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.*

*இது குறித்து நேற்று அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்: "சேலம் பெரியார் பல்கலைக் கழகத்தின் கட்டமைப்புகளை பயன்படுத்தி தமது தலைமையில் தனியார் நிறுவனம் தொடங்கியது உள்ளிட்ட ஊழல் குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலும், பட்டியலினத்தவர் வன்கொடுமை சட்டத்தின்படியும் கைது செய்யப்பட்டு, இடைக்கால பிணையில் வந்துள்ள அதன் துணை வேந்தர் ஜெகநாதன் இதுவரை பணியிடை நீக்கம் செய்யப்படாதது அதிர்ச்சியளிக்கிறது.*

*முந்தைய காலங்களில் கோவை அண்ணா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருந்த ராதா கிருஷ்ணன், பாரதியார் பல்கலைக்கழக துணை வேந்தர் கணபதி ஆகியோர் கைது செய்யப்பட்ட போது, உடனடியாக அவர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். ஆனால், பெரியார் பல்கலைக் கழக துணை வேந்தர் விவகாரத்தில் மட்டும் அவருக்கு தனிச் சலுகை காட்டப்படுவது வியப்பளிக்கிறது.*

*மாணவர்களுக்கு உயர் கல்வி வழங்குவதற்கான துணை வேந்தர் போன்ற உயர் பதவிகளில் அப்பழுக்கற்றவர்கள் மட்டுமே இருக்க வேண்டும். அதைக் கருத்தில் கொண்டு ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்ட பெரியார் பல்கலைக் கழக துணை வேந்தர் ஜெகநாதனை பணியிடை நீக்கம் செய்ய வேண்டும். தலைமறைவாக உள்ள பல்கலைக்கழகத்தின் பொறுப்பு பதிவாளர் தங்கவேலுவை கைது செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*துணை வேந்தரும், பதிவாளரும் இல்லாத சூழலில் பல்கலைக் கழகத்தை நிர்வகிக்க இடைக்கால நிர்வாகக் குழுவை அமைக்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என ராமதாஸ் கூறியுள்ளார்.*

### சீர்காழி அருகே கீழச்சாலை திருவாலியை இணைக்கும்

# பழமையான ஆற்றுப்பாலம் இடிந்து விழுந்ததால் வாகன போக்குவரத்து நிறுத்தம், பொதுமக்கள் அவதி



சீர்காழி

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே திருவாலி கிராமத்திலிருந்து கீழச்சாலை கிராமத்திற்கு செல்லும் வழியில் மிகவும் பழமையான மண்ணி ஆற்று பாலம் உள்ளது.

இந்த பாலத்தின் வழியே இன்று கனரக வாகனம் செல்லும் போது பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழந்தது. இதனால் அண்ணன் பெருமாள் கோவில், மேலச்சாலை, கீழச்சாலை, அஞ்சாமலை, நாங்கூர் பகுதிகளில் இருந்து திருவாலி பகுதிக்கு செல்வதற்கான போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மாலை நேரத்தில் பாலம் இடிந்து விழுந்ததால் சுற்றியுள்ள 5 கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் 10 கிலோ மீட்டருக்கு மேல் சுற்றி வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மாவட்ட நிர்வாகம் மாற்று ஏற்பாடு செய்ய வழிவகை செய்ய வேண்டும், மேலும் பழைய பாலத்தை இடித்து விட்டு புதிய பாலம் அமைத்து தர பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காங்கிரஸில் இணைகிறார் ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டியின் சகோதரி ஒய்.எஸ்.ஷர்மிளா



ஹைதராபாத் : ஜன. 3, ஒய்எஸ்ஆர் தெலங்கானா கட்சியின் நிறுவனத் தலைவரும். ஆந்திரப் பிரதேச முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டியின் சகோதரியுமான ஒய்.எஸ்.ஷர்மிளா நாளை (ஜன. 4) காங்கிரஸ் கட்சியில் இணையவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆந்திரா முதல்வர் ஒய்.எஸ். ஜெகன்மோகன் ரெட்டியின் தங்கையான ஒய்.எஸ். ஷர்மிளா, தெலங்கானாவில் ஒய்.எஸ்.ஆர்.தெலங்கானா கட்சி என்ற கட்சியை நடத்தி வருகிறார். தன்னுடைய கட்சியை காங்கிரஸ் கட்சியுடன் இணைக்கப் போகிறார் என்ற பேச்சுகள் அண்மையில் திடீரென எழுந்தன. இதையடுத்து, கடந்த நவம்பர் 3 ஆம் தேதி ஒரு முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதில், "தெலங்கானாவில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை. தேர்தலில் வாக்குகள் பிளவுபடுவதைத் தடுக்க காங்கிரஸுக்கு எனது ஆதரவை வழங்க முடிவு செய்துள்ளேன். கேசிஆர் மற்றும் அவரது கூட்டாளிகளின் பெரும் ஊழலால், ஒரு பணக்கார மாநிலம் இப்போது பெரும் கடனில் சுமையில் சிக்கியுள்ளது" என வெளிப்படையாக விமர்சித்திருந்தார். அதேபோல தேர்தலில் காங்கிரஸ் கட்சியும் தனது வெற்றியைப் பதிவு செய்தது.

இந்நிலையில், ஒய்எஸ்ஆர் கட்சியின் நிறுவனத் தலைவர் ஒய்.எஸ்.ஷர்மிளா நாளை (ஜன. 4) காங்கிரஸ் கட்சியில் இணையவிருப்பதாக கூறப்படுகிறது. அண்மையில் நடந்து முடிந்த ஐந்து மாநிலத் தேர்தலில் காங்கிரஸ் தெலங்கானாவில் வரலாற்று வெற்றியைப் பெற்றது.

கேசிஆரின் பாரத் ராஷ்ட்ர சமிதி கட்சிக்கு முடிவு கட்டியது. இந்நிலையில் இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கிடையில், ஒய்.எஸ். ஷர்மிளா நேற்று காலை 11 மணிக்கு கட்சித் தலைவர்களுடன் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தார். இதில் கட்சியை இணைப்பது மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# யுனைட்டட் கோப்பை டென்னிஸ் காலிறுதியில் போலந்து : ஸ்வியாடெக் அசத்தல்



**பெர்த் : ஜன. 3,**

**யுனைட்டட் கோப்பை டென்னிஸ் தொடரில் ஸ்பெயின் அணியை வீழ்த்திய போலந்து காலிறுதிக்கு முன்னேறியது.**

ஆஸ்திரேலியாவின் பெர்த் மற்றும் சிட்னி நகரங்களில் 18 நாடுகள் பங்கேற்கும் 2வது யுனைட்டட் கோப்பை டென்னிஸ் போட்டி நடந்து வருகிறது. ஒவ்வொரு அணியிலும் தலா 3 வீரர், வீராங்கனைகள் இடம் பெற்றுள்ளனர். பெர்த்தில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை நடந்த ஏ பிரிவு ஆட்டத்தில் போலந்து-ஸ்பெயின் அணிகள் மோதின.

கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் போலந்தின் இகா ஸ்வியாடெக் ஹோபர்ட் ஹர்காக்ஸ் இணை ஸ்பெயினின் டேவிடோவிச் ஃபோகினா சாரா சோரிபெஸ் டோர்மோ இணையுடன் மோதியது. அதில் அதிரடியாக விளையாடிய போலந்து ஜோடி 6-0, 6-0 என நேர் செட்களில் மிக எளிதாக வென்று ஒரு புள்ளியை பெற்றது. ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் ஸ்பெயினின் டேவிடோவிச் ஃபோகினா 3-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் போலந்தின் ஹோபர்ட் ஹர்காக்சை வீழ்த்தி பதிலடி கொடுத்தார்.

இரு அணிகளும் 1-1 என சமநிலை வகிக்க, கடைசியாக நடந்த மகளிர் ஒற்றையர் ஆட்டத்தில் இகா ஸ்வியாடெக் (போலந்து) 6-2, 6-1 என நேர் செட்களில் சாரா சோரிபெஸ் டோர்மோவை (ஸ்பெயின்) வீழ்த்தினார். போலந்து 2-1 என்ற கணக்கில் 2வது வெற்றியை பெற்றது. ஏற்கனவே பிரேசிலை 3-0 என வீழ்த்தியிருந்தது. ஏ பிரிவில் முதலிடம் பிடித்த போலந்து, முதல் அணியாக காலிறுதியை உறுதி செய்துள்ளது.

# காயத்தில் இருந்து மீள தீவிர உடற்பயிற்சியில் ஹர்திக் பாண்டியா



**மும்பை : ஜன. 3,**

**இந்திய கிரிக்கெட் அணியின் ஆல்ரவுண்டர் ஹர்திக் பாண்டியாவின் உடற்தகுதி குறித்து சமீப காலமாக பல வதந்திகள் வெளிவருகின்றன. 2023 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின்போது வங்கதேசத்துக்கு எதிரான ஆட்டத்தில் கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக, அத்தொடரில் இருந்து பாதியிலேயே வெளியேறினார்.**

அதன்பின் எந்தவிதமான கிரிக்கெட் தொடரிலும் பங்கேறவில்லை என்பதால், அவரின் உடற்தகுதி குறித்து பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. இடையில், குஜராத் டைட்டன்ஸ் அணியில் இருந்து மும்பை இந்தியன்ஸ் அணிக்கு இடமாறினாலும், காயம் காரணமாக வரவிருக்கும் ஐபிஎல் தொடரில் பாண்டியா பங்கேற்பது குறித்து சந்தேகங்கள் எழுப்பப்பட்டுவந்தன.

இந்த சந்தேகங்களுக்கு விடையளிக்கும் வகையில் ஹர்திக் பாண்டியா வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். ஹர்திக் தீவிரமாக உடற்பயிற்சி செய்யும் வீடியோவே அது. காயத்தில் இருந்து மீண்டு வரும் ஹர்திக், உடற்தகுதி பெரும்வகையில் தீவிர உடற்பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். அந்த வீடியோவை தனது இன்ஸ்டா பக்கத்தில் பதிவிட்டு, கேப்ஷனாக, "முன்னேற்றம், தினமும்" என்றும் பதிவிட்டு இருக்கிறார். இந்த வீடியோ தற்போது வைரலாக பரவிவருகிறது.

ஐபிஎல் தொடர் இன்னும் சில மாதங்களிலும், அதன்பிறகு டி20 உலகக் கோப்பையும் நடைபெறவிருப்பதை அடுத்து அதற்கு தயாராகும் விதமாக தீவிர உடற்பயிற்சியில் ஈடுபட்டுள்ளார் ஹர்திக். இதனையடுத்து அவரது ரசிகர்கள் இந்த வீடியோவை வைரலாக்கி வருகின்றனர்.

வரலாறு சினிமா

# அரசியலிலும் அவர் கேப்டன் விஜயகாந்துக்கு பிரதமர் மோடி புகழாரம்



**திருச்சி : ஜன. 3,**

**"சினிமாவில் மட்டுமல்ல அரசியலிலும் விஜயகாந்த் கேப்டன்" என பிரதமர் மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.**

திருச்சி விமான நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள முனையம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இந்த விழாவில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழக முதல்வர் ஸ்டாலின், மத்திய அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா, இணை அமைச்சர் எல்.முருகன், தமிழக அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ், எ.வ.வேலு, திருச்சி மக்களவை உறுப்பினர் திருநாவுக்கரசர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதில் பேசிய மோடி, கடந்த வருடம் டிசம்பர் 28ம் தேதி மறைந்த நடிகரும் தேமுதிக தலைவருமான விஜயகாந்த் குறித்து உருக்கமாகப் பேசியுள்ளார்.

அவர் பேசியிருப்பதாவது, "கடந்த 2023வது வருடத்தின் கடைசி சில வாரங்கள் கடினமானதாக இருந்திருக்கிறது. கனமழை மக்களைக் கடுமையாக பாதித்தது. மேலும், சில நாட்களுக்கு முன்பு விஜயகாந்தை இழந்திருக்கிறோம். சினிமாவில் மட்டுமல்ல அவர் அரசியலிலும் கேப்டனாக இருந்து வந்திருக்கிறார். திரைப்படங்களில் அவரது செயல்பாடு காரணமாக மக்களின் இடத்தில் தனி இடம் பிடித்தார். அரசியல்வாதியாகவும் தேசிய நலனுக்கு அவர் முன்னுரிமை கொடுத்து வந்திருக்கிறார். அவருக்கு என் அஞ்சலியை காணிக்கை ஆக்குகிறேன். அவரது குடும்பத்திற்கும் எனது ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார். இதுமட்டுமல்லாது, மறைந்த விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதனுக்கும் தனது இரங்கலைத் தெரிவித்தார் மோடி.

# நகைச்சுவை கலந்த த்ரில்லர் ஃபஹத் பாசில் - வடிவேலு இணையும் பட அப்டேட்



**சென்னை : ஜன. 3,**

**'மாமன்னன்' படத்துக்குப் பிறகு ஃபஹத் பாசிலும், வடிவேலும் இணையும் புதிய படம், நகைச்சுவை கலந்த த்ரில்லரில் உருவாக இருப்பதாகவும், படப்பிடிப்பு இம்மாதம் தொடங்கும் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.**

ஆர்பி சௌத்ரியின் சூப்பர் குட் பிலிம்ஸ் நிறுவனத்தின் 98-வது படமாக உருவாகும் இப்படத்தை சுதீஷ் சங்கர் இயக்குகிறார். இவர் கடந்த 2009-ம் ஆண்டு வெளியான 'ஆறு மனமே' படத்தை இயக்கியிருந்தார். 2014-ம் ஆண்டு திலீப் நடிப்பில் மலையாளத்தில் வெளியான 'வில்லாலி வீரன்' படத்தை இயக்கியிருந்தார். படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார்.

'மாமன்னன்' படத்துக்குப் பிறகு வடிவேலுவும், ஃபஹத் பாசிலும் இணைந்து நடிக்க உள்ளதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. படத்துக்கு இன்னும் தலைப்பிடப்படவில்லை. கலைசெல்வன் சிவாஜி ஒளிப்பதிவு செய்யும் இப்படத்துக்கு ஸ்ரீஜித் சாரங் படத்தொகுப்பு பணிகளை கவனிக்கிறார்.

நாகர்கோயிலில் இருந்து பொள்ளாச்சி செல்லும் இருவரின் சாலைப் பயணம் பற்றிய கதை. வடிவேலும், ஃபஹத் பாசிலும் மேற்கொள்ளும் இந்தப் பயணம் நகைச்சுவையுடன் தொடங்கி, த்ரில்லர் கதைக்களத்துடன் முடியும் என கூறப்படுகிறது. மேலும், இப்படம் சமூக பிரச்சினையை அடிப்படையாக கொண்டு உருவாக உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. படத்தின் அறிவிப்பு போஸ்டரும் கூட சாலைப்பயணத்தை குறிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. ஜனவரி 22-ம் தேதி சென்னையில் படப்பிடிப்பு தொடங்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

# தேசிய த்ரோபால் சாம்பியன் தமிழக அணியில் இடம்பெற்ற திருப்பூர் பெண் தொழிலாளர்களுக்கு உற்சாக வரவேற்பு




**திருப்பூர் : ஜன. 3,**

**தேசிய அளவிலான த்ரோ பால் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்று, திருப்பூருக்கு திரும்பிய பெண் தொழிலாளர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.**

ஜார்க்கண்ட் மாநிலத்தில் 31-வது சப் - ஜூனியர் மற்றும் 46-வது சீனியர் தேசிய அளவிலான த்ரோ பால் சாம்பியன்ஷிப் போட்டி, கடந்த 27-ம் தேதி முதல் 29-ம் தேதி வரை நடைபெற்றது. இப்போட்டிகளில், 18 மாநிலங்களில் இருந்து பல்வேறு அணிகள் பங்கேற்றன. இதில் சீனியர் தேசிய அளவிலான த்ரோ பால் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில், தமிழ்நாடு மற்றும் சத்தீஸ்கர் அணிகள் மோதின.

இந்த போட்டியில் வெற்றி பெற்று தமிழக அணி சாம்பியன் பட்டம் பெற்றது. தமிழ்நாடு அணி சார்பில் வைஷ்ணவி, ஷிவானி, நீலு, பெண்ணரசி, அமிர்தா, அக்ஷயா, பிரியா ஆகியோர் பங்கேற்றனர். இதில் வைஷ்ணவி, ஷிவானி, நீலு ஆகிய 3 பேரும் அவிநாசி அருகே தெக்கலூரை சேர்ந்த தனியார் நூற்பாலை தொழிலாளர்கள் ஆவர். இவர்கள், தமிழ்நாடு அணிக்கு தேர்வாகி விளையாடி வருகின்றனர்.

ஜார்க்கண்டில் இருந்து திருப்பூருக்கு வந்த தமிழக அணிக்கு, தனியார் நூற்பாலை சார்பில் மேள, தாளங்கள் முழங்க பனியன் நிறுவன தொழிலாளர்கள் நடனமாடி உற்சாகமாக வரவேற்பளித்தனர். இதில் பலர் பங்கேற்றனர். காலை, மாலை வேளைகளில் விளையாடுவதற்கான வாய்ப்பை தனியார் நூற்பாலை நிறுவனம் அளித்ததால், இந்த வெற்றியை ஈட்டியுள்ளதாக விளையாட்டு வீராங்கனைகள் தெரிவித்தனர்.

# பார்முக்கு திரும்ப விராட் கோலியை பின்பற்றுங்கள் - பாபர் அசாமுக்கு பாக். முன்னாள் வீரர் அறிவுரை



**கராச்சி : ஜன. 3,**

**கடந்த வருடம் நடைபெற்ற உலகக்கோப்பை தொடரில் பாபர் அசாம் தலைமையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி லீக் சுற்றுடன் வெளியேறியது.**

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் பாபர் அசாம் சமீப காலங்களில் ரன்கள் குவிக்க முடியாமல் திணறி வருகிறார். சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அறிமுகம் ஆன புதிதில் நல்ல செயல்பாடுகளை வெளிப்படுத்திய அவர் தற்போது விரைவில் ஆட்டமிழந்து பாகிஸ்தான் அணிக்கு பெரும் பின்னடைவை கொடுத்து வருகிறார். மேலும் கடந்த வருடம் நடைபெற்ற உலகக்கோப்பை தொடரில் பாபர் அசாம் தலைமையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி லீக் சுற்றுடன் வெளியேறியது. அதனால் விமர்சனங்கள் எழுந்த நிலையில் அந்த தோல்விகளுக்கு பொறுப்பேற்ற பாபர் அசாம் அனைத்து விதமான கேப்டன்ஷிப் பதவிகளையும் ராஜினாமா செய்வதாக அறிவித்து தற்போது சாதாரண வீரராக விளையாடி வருகிறார்.

இருப்பினும் அவரால் தற்போது நடைபெற்று வரும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் பெரிய அளவில் சோபிக்க முடியவில்லை. இந்நிலையில் பாபர் அசாம் பார்முக்கு திரும்ப கடந்த காலங்களில் சதமடிக்காமல் தடுமாறியபோது சிறிது ஓய்வெடுத்து கம்பேக் கொடுத்த இந்திய நட்சத்திர வீரர் விராட் கோலியை பின்பற்ற வேண்டும் என்று பாகிஸ்தான் முன்னாள் வீரர் முஷ்டாக் அகமது ஆலோசனை கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், "பாபர் அசாம் பார்முக்கு திரும்ப விராட் கோலியை பின்பற்ற வேண்டும். ஒரு வீரர் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளார் என்று உணரும்போது அவர் 2 - 3 போட்டிகளில் இருந்து ஓய்வு எடுக்கலாம். அதேபோல விராட் கோலி பார்மின்றி தடுமாறியபோது ஓய்வெடுத்தார். அதன் பின் விளையாட திரும்பிய அவர் தற்போது எவ்விதமான தடுமாற்றத்தையும் சந்திக்கவில்லை. அவரைப்போலவே பார்முக்கு திரும்பி அசத்துவதற்காக பாபர் அசாமும் தற்காலிகமாக ஓய்வு எடுக்க வேண்டும்.

இந்த விவகாரத்தில் அணி நிர்வாகம் உரிமை எடுத்து பாபர் அசாமிடம் ஓய்வெடுக்குமாறு அறிவுரை கூற வேண்டும். ஏனெனில் கடந்த காலங்களில் அபாரமான செயல்பாடுகளை வெளிப்படுத்திய அவர் நம்முடைய ஹீரோ. உலக அரங்கில் அவர் டாப் வீரராகவும் கருதப்படுகிறார். இருப்பினும் கடந்த ஆசிய மற்றும் உலகக்கோப்பையில் தடுமாறிய அவர் தற்போது கேப்டன்ஷிப் பதவியை இழந்துள்ளார்" என்று கூறினார்.

# "எனது தொப்பியை காணவில்லை, தயவுசெய்து கொடுத்து விடுங்கள்"

## டேவிட் வார்னர் கோரிக்கை



**சிட்னி : ஜன. 3,**

**தனது கடைசி டெஸ்ட் போட்டியில் பங்கேற்கும் ஆஸ்திரேலிய வீரர் டேவிட் வார்னரின் பச்சை நிற தொப்பி காணாமல் போயிருக்கிறது.**

இது தொடர்பாக தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வீடியோ பதிவிட்டுள்ள டேவிட் வார்னர், "அனைவருக்கும் வணக்கம். எனக்கு வேறு வழியில்லை என்பதால் கடைசி முயற்சியாக இந்த வீடியோவை பதிவிடுகிறேன். எனது பச்சை நிற தொப்பி எனது லக்கேஜில் இருந்து காணாமல் போயுள்ளது. சில தினங்களுக்கு முன் மெல்பேர்ன் விமான நிலையத்தில் இருந்து சிட்னிக்கு எனது லக்கேஜ் எடுத்துச் செல்லப்பட்டது. அப்போது காணாமல் போயிருக்கலாம்.

கேமராவில் செக் செய்து பார்த்தபோது போதுமான தகவல் ஏதும் கிடைக்கவில்லை. எனது தொப்பியை யாராவது எடுத்திருந்தால் தயவு செய்து கொடுத்து விடுங்கள். நான் எந்த நடவடிக்கையும் எடுக்க போவதில்லை. என்னிடம் மற்றொரு பேக் உள்ளது. அதனை உங்களுக்குப் பரிசாக கொடுக்கிறேன். ஆனால், என்னுடைய தொப்பியை மட்டும் கொடுத்து விடுங்கள்" என்று தெரிவித்துள்ளார்.

பொதுவாக கிரிக்கெட் வீரர்கள் மத்தியில் ஐசிசி வழங்கும் அவர்களின் தொப்பி மதிப்புமிக்கதாக கருதப்படும். அதுவும் ஆஸ்திரேலிய வீரர்களுக்கு அந்த அணியால் வழங்கப்படும் பச்சை நிறத் தொப்பியை மிகப் பெரும் கௌரவமாக கருதுவார்கள். அந்தவகையில் வார்னரும் காணாமல் போன தனது பச்சை நிற தொப்பியை கண்டுபிடிக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார் டேவிட் வார்னர். ஏற்கெனவே பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் தொடரே தான் பங்கேற்று விளையாடும் கடைசி டெஸ்ட் தொடர் என அவர் அறிவித்திருந்தார்.

தற்போது ஆஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றன. 3 போட்டிகள் கொண்ட இந்த தொடரின் கடைசி போட்டி இன்று சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற உள்ளது. இந்த போட்டியே வார்னர் பங்கேற்று விளையாடும் கடைசி டெஸ்ட் போட்டி. 37 வயதான அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் 8,695 ரன்கள் எடுத்துள்ளார்.

கடந்த 2009 முதல் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் வார்னர் விளையாடி வருகிறார். இதுவரை 161 ஒருநாள் போட்டிகளில் 6,932 ரன்கள் எடுத்துள்ளார். 2015 மற்றும் 2023 உலகக் கோப்பை தொடரை வென்ற அணியில் வார்னர் இடம்பெற்றிருந்தார். நடப்பு ஆண்டில் டி20 உலகக் கோப்பை தொடர் நடைபெற உள்ளது. அதில் கவனம் செலுத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் அணிக்கு தேவைப்பட்டால் 2025 சாம்பியன்ஸ் டிராபி தொடரில் விளையாடவும் தான் தயார் என தெரிவித்துள்ளார்.

ஃப்ரான்சைசஸ் டி20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாட உள்ளதாகவும், குடும்பத்தினருடன் தனது நேரத்தை செலவிட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அணிக்கு தேவை இருந்தால் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அயோத்தி ராமர் கோயில் கும்பாபிஷேகம் நடிகர் ரஜினிக்கு நேரில் அழைப்பு



**சென்னை : ஜன. 3,**

**அயோத்திராமர் கோயில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ள வேண்டும் என நடிகர் ரஜினிகாந்திற்கு நேரில் நேற்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

உத்தரப் பிரதேச மாநிலம், அயோத்தியில் பிரம்மாண்டமாக ராமர் கோயில் கட்டப்பட்டு வருகிறது. இக்கோயில் கட்டுமானப் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. ஜனவரி 22-ம் தேதி, புதிய கோயிலில் 5 வயது குழந்தை வடிவிலான ராமர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது.

இவ்விழாவில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நாடு முழுவதும் இருந்து முக்கிய விருந்தினர்கள் கலந்துகொள்ள உள்ளார். இதற்கான ஏற்பாடுகளை ராமஜென்ம பூமி அறக்கட்டளையைச் சேர்ந்தவர்கள் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் அயோத்தி, ராம ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ரா சார்பில் நடிகர் ரஜினிகாந்தை நேரில் சந்தித்து, கும்பாபிஷேக நிகழ்வுக்கு கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சென்னை போயஸ் கார்டனில் உள்ள அவரது இல்லத்திற்கு ஆர்எஸ்எஸ் தென்பாரத அமைப்பாளர் செந்தில்குமார், தென் பாரத மக்கள் செயலாளர் பிரகாஷ், மாநில இணைச்செயலாளர் இராம இராஜசேகர், மாநகர் பொறுப்பாளர் ராம்குமார் மற்றும் பாஜக, சமூக ஊடகப் பார்வையாளர் அர்ஜுனமூர்த்தி ஆகியோர் நேற்று அழைப்பிதழ் கொடுத்து அழைப்பு கொடுத்துள்ளனர்.

கோவில் கும்பாபிஷேக அழைப்பிதழை பெற்றுக்கொண்ட ரஜினிகாந்த் குடும்பத்துடன் வருவதாக உறுதியளித்துள்ளார். மேலும் இதனை மிகவும் பாக்கியமாகக் கருதுவதாகவும், எல்லாம் ராமரின் அருள் எனவும் உணர்வுப்பூர்வமாக ரஜினிகாந்த் அவர்கள் கூறி, பயபக்தியுடன் அழைப்பிதழைப் பெற்றுக்கொண்டார். ராமர் கோவில் கும்பாபிஷேகம் நடக்க இன்னும் சில நாட்களே எஞ்சியுள்ள நிலையில், உத்தர பிரசேதத்தில் பக்கதர்களுக்கான அடிப்படை வசதிகளை செய்வதற்கான பணிகள் விரைவுப்படுத்தப் பட்டுள்ளது.

## அரசியல் தலைவர்களை இழிவுப்படுத்தி போஸ்டர்

# ராம்கோபால் வர்மா படத்துக்கு அதிரடி தடை



**தெலங்கானா : ஜன. 3,**

**அரசியல் தலைவர்களை இழிவுப்படுத்தும் வகையிலானபடப்போஸ்டரை வெளியிட்டதற்காக இயக்குநர் ராம்கோபால் வர்மாவின் படத்திற்கு தெலங்கானா உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.**

சர்ச்சைக்குரிய படங்களையும் கருத்துகளையும் தெரிவிப்பதற்குப் பெயர் போனவர் இயக்குநர் ராம்கோபால் வர்மா. நாகர்ஜுனா, ஸ்ரீதேவி என சினிமாவில் முன்னணி நட்சத்திரங்களை வைத்துப் படங்களை இயக்கி வெற்றிக் கண்ட இவர், கடந்த சில வருடங்களாக எடுக்கும் படங்கள் அனைத்துமே திரைத்துறையில் சலசலப்பை ஏற்படுத்தி வருகிறது. சமீபத்தில் லெஸ்பியனை மையமாகக் கொண்ட 'டேஞ்சரஸ்' என்ற படத்தை இயக்கி இருந்தார். இந்தப் படத்தை விளம்பர படுத்துகிறேன் பேர்வழி என அந்தப் படத்தில் நடித்திருந்த நடிகை ஆஷு ரெட்டியின் காலடியில் அமர்ந்து கொண்டு, அவரின் காலை வருடி, ஒவ்வொரு விரலுக்கும் முத்தம் கொடுத்து முகம்சுளிக்க வைத்தார். இப்படி பல சர்ச்சைகளுக்கு பஞ்சமில்லாதவர்தான் ராம்கோபால் வர்மா.

இப்போது இவர் ஆந்திர முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி வாழ்க்கையை 'வியூகம்' என்ற தலைப்பில் படமாக எடுத்து வருகிறார். இதில் ஜெகன்மோகன் ரெட்டி கதாபாத்திரத்தில் நடிகர் அஜ்மல் நடித்துத்துள்ளார். இந்த படத்தில் ஆந்திர முன்னாள் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, நடிகர் பவன் கல்யாண் ஆகியோரின் கதாபாத்திரங்களும் வருகின்றன. இவர்கள் இருவரையும் தொடர்புபடுத்தி படத்தில் பல சர்ச்சைக்குரிய காட்சிகள் இடம் பெற்றுள்ளன. இதுமட்டுமல்லாது, அண்மையில் இந்தப்படத்தின் போஸ்டர் வெளியானது. அந்தப் போஸ்டர் இருவரையும் இழிவுப்படுத்தும் வகையில் இருந்ததால், தெலுங்கு தேசம் கட்சி தொண்டர்கள் வியூகம் படத்தின் போஸ்டரை தீவைத்து எரித்தனர்.

மேலும் இயக்குநர் ராம்கோபால் வர்மாவின் அலுவலத்திற்குள் நுழைந்தும் பொருட்களை சேதப்படுத்தியுள்ளனர். இதையடுத்து 'வியூகம்' படத்தை தடை செய்ய வேண்டும் என்று சந்திரபாபு நாயுடுவின் மகன் நாராலோகேஷ் தெலங்கானா நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஜனவரி 11ம் தேதிவரை 'வியூகம்' படத்தைத் திரையிட தடை விதித்துஉத்தரவுபிறப்பித்தனர்.



# வரலாறு உலகம்

## தென்கொரிய எதிர்க்கட்சித் தலைவர் மீது தாக்குதல்

### செய்தியாளர்கள் சந்திப்பின்போது கழுத்தில் கத்திக்குத்து



**சியோல் : ஜன. 3,**

**தென்கொரியா எதிர்க்கட்சித் தலைவர் லீ ஜே மியுங், அந்நாட்டின் துறைமுகநகரமானபூசானில் செய்தியாளர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது கத்தியால் குத்தப்பட்டார்.**

லீ புதிய விமானநிலையத்தை பார்வையிட்ட பின் செய்தியார்களுடன் பேசிய படி தனது காருக்கு நடந்து செல்லும் போது அவருக்கு முன்னாள் சென்றநபர் லீமீது பாய்ந்து அவரின் கழுத்தில் கத்தியால் குத்தினார். இந்தத் தாக்குதலால் நிலைகுலைந்து கீழே விழும் லீக்கு மக்கள் உதவி செய்தனர். அதில் ஒருவர் தனது கைக்குட்டையால் அவரின் கழுத்தைக் அழுத்திப் பிடிப்பது உள்ளிட்ட காட்சிகள் உள்ளூர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.

காயம்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் உடனடியாக ஆம்புலன்ஸில் ஏற்றப்பட்டு, பின்னர் ஹெலிகாப்டர் மூலமாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். கத்திக்குத்து காயத்தால் லீக்கு ரத்தப்போக்கு இருந்த போதிலும் அவர் நினைவிழக்கவில்லை. உடனடியாக அவர் பூசன் தேசிய பல்கலைக்கழக மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் என்றும் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து மருத்துவமனைக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய லீயின் ஜனநாயகக் கட்சி எம்.பி. குவான் சில் சியுங் கூறுகையில், “இது எதிர்க்கட்சித் தலைவர் லீக்கு எதிரான தீவிரவாத தாக்குதல், ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலான இதுபோன்ற செயல்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. லீயின் நிலைமை குறித்த முழுமையான மருத்துவ அறிக்கைக்காக காத்திருக்கிறோம். இந்த தாக்குதல் குறித்து முழுமையான விசாரணை மேற்கொள்ள வேண்டும்” என்று தெரிவித்தார்.

அவரின் கழுத்தில் ஒரு சென்டிமீட்டர் அளவுக்கு காயம் ஏற்பட்டுள்ளது. ரத்தப்போக்கு குறைவாகவே உள்ளது. அவர் சுயநினைவில் இருக்கிறார் என்றுபூசான்நகர போலீஸார் தெரிவித்துள்ளனர். லீயை தாக்கியவரை போலீஸார் கைது செய்துள்ளனர் என்று யுன்ஹப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் குறித்து கேள்விப்பட்டதும் லீ ஜோ மியூங் பாதுகாப்பு குறித்து அதிபர் யோன் கவலையடைந்ததாகவும், எந்தச் சூழ்நிலையிலும் இதுபோன்ற தாக்குதல் சம்பவங்களைஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

59 வயதான எதிர்க்கட்சித் தலைவர் லீ கடந்த 2022 ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில் யூன் சுக் யோலிடம் லீ தோல்வியுற்றார். அடுத்த 2027 ஆம் ஆண்டு அதிபர் பதவிக்கான தேர்தலில் லீ போட்டியிடலாம் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. சமீபத்தில் வெளியான கருத்துக்கணிப்புகள் அவர் தீவிரமான போட்டியாளராக இருப்பார் என்று தெரிவிக்கின்றன. இந்நிலையில் அவர் தாக்கப்பட்டுள்ளார்.

## ஜப்பானில் ஒரே நாளில் 155 நிலநடுக்கங்கள், பலி 48 ஆக உயர்வு : சுனாமி எச்சரிக்கை வாபஸ்

### முழு வீச்சில் மீட்புப் பணிகள்



**டோக்கியோ : ஜன. 3,**

**ஜப்பானில் 7.6 ரிக்டர் அளவில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் இதுவரை 48க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.**

ஜப்பானின் இஷிகாவா மாகாணத்தின் கடற்கரை பகுதியை மையமாகக் கொண்டு, நேற்று முன்தினம் திங்கள்கிழமை மாலை 4 மணி அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 7.6 என பதிவானதாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. இந்த நிலநடுக்கத்தால் இஷிகாவா மட்டுமின்றி அதனை ஒட்டி உள்ள மற்ற மாகாணங்களும் கடுமையாக குலுங்கின. அங்குள்ள வீடுகள், கட்டிடங்கள் அதிர்ந்தன. பல பகுதிகளில் சாலைகள் பெயர்ந்து உடைந்தன. மின்கம்பங்கள் உடைந்து சரிந்தன. சூப்பர் மார்கெட்களில் பல பொருட்கள் கீழே விழுந்து உடைந்து சிதறின. இதனால் மக்கள் பீதி அடைந்து, கட்டிடங்களை விட்டு வெளியேறி சாலையில் குவிந்தனர். இந்த பயங்கர நிலநடுக்கத்தை தொடர்ந்து 21 முறை நில அதிர்வுகள் அடுத்தடுத்து ஏற்பட்டதால் கடும் பீதி நிலவியது.

அதோடு, ஜப்பான் வானிலை ஆய்வு மையம் சுனாமி எச்சரிக்கை விடுத்ததால் மக்கள் பதற்றமடைந்தனர். எச்சரிக்கை விடுத்த சில நிமிடங்களில் ஜப்பானின் மேற்கு கடற்பகுதிகளை 1.2 மீட்டர் உயரத்தில் சுனாமி அலைகள் தாக்கின. பல இடங்களில்கடல்நீர் ஊருக்குள் புகுந்தது. இந்த கடுமையான நிலநடுக்கத்தைத் தொடர்ந்து வஜிமாவில் உள்ள குடியிருப்பு பகுதியில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 50க்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து நாசமாயின. நிலநடுக்கத்தால் இதுவரை 48 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

வாஜிமா துறைமுகத்தில் மட்டும் 10க்கும் மேற்பட்டோர் பலியானதாக கூறப்படுகிறது. மேலும் நேற்று முன்தினம் திங்கள்கிழமை முதல் 155 முறை நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து நிலநடுக்கம் மற்றும் நில அதிர்வுகள் ஏற்பட்டு வருவதாகவும் ஜப்பான் வானிலை ஏஜென்சி தெரிவித்துள்ளது. அனைத்து சுனாமி எச்சரிக்கைகளையும் அந்நாட்டு வானிலை மையம் திரும்ப பெற்றுள்ளது. இருப்பினும் அடுத்த 2 நாட்களுக்கு கடலில் அலைகளில் வழக்கத்திற்கு மாறாக அதிகமாகவும் உயரமாகவும் எழும்பும் என்பதால் மக்கள் கடலோர பகுதிக்கு செல்ல வேண்டாம் என்றும் எச்சரித்துள்ளது.

## டிரோன்கள் மூலம் ரஷ்யா தாக்குதல் உக்ரைன் பதிலடியில் 5 பேர் பரிதாப பலி



**கீவ் : ஜன. 3,**

**புத்தாண்டின் அதிகாலையில் உக்ரைனின் பல நகரங்களின் மீது ரஷ்யா டிரோன்களை ஏவி தாக்குதல் நடத்தியதில் சிறுவன் உயிரிழந்தான். இதற்கு பதிலடியாக உக்ரைன் நடத்திய தாக்குதலில், 5 பேர் பலியாயினர்.**

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையேயான போர் விரைவில் இரண்டாவது ஆண்டை நெருங்கும் நிலையில் உள்ளது. கடந்த 26ம் தேதி உக்ரைன் மீது ரஷ்யா 122 ஏவுகணைகள் மற்றும் 36 ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இதில், 49 பேர் பலியாகினர். ஏராளமானோர் படுகாயமடைந்தனர்.

அதை தொடர்ந்து ரஷ்யாவின் பெல்கோராட் நகர் மீது உக்ரைன் ராணுவம் குண்டுகளை வீசி தாக்கியது. இதில், 21 பேர் பலியாகினர். இந்நிலையில், புத்தாண்டு துவங்கிய நிலையில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை அதிகாலையில் இருந்து உக்ரைன் நகரங்களில் ஷாகேத் வகை டிரோன்களை வீசி ரஷ்யா தாக்குதல் நடத்தியது. 90க்கும் மேற்பட்ட டிரோன்கள் ஏவியதில் குடியிருப்பு கட்டிடம் இடிந்து விழுந்து 15 வயது சிறுவன் பலியானான்.

இடிபாடுகளில் சிக்கி பலர் காயமடைந்தனர் என ஒடேசா பகுதிக்கான ராணுவ நிர்வாகி தெரிவித்தார். இதற்கு பதிலடியாக ரஷ்ய ஆக்கிரமிப்பில் உள்ள டொனட்ஸ்க் மாகாணத்தில் உள்ள பகுதிகள் மீது உக்ரைன் ராணுவம் குண்டுகளை வீசியதில் 4 பேர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்தார். மேலும் எல்லையில் உள்ள ரஷ்ய நகரமான ஷெபேகினோ மீது உக்ரைன் குண்டுவீசியதில் ஒருவர் பலியானார். இன்னொருவர் படுகாயமடைந்தார் என மாகாண ஆளுநர் கிளாட்கோ தெரிவித்தார்.

## ஜப்பானில் அடுத்த துயரம் : தரையிறங்கியபோது தீப்பிடித்த விமானம் – உயிர் தப்பிய 379 பேர் பயணிகள்



**டோக்கியோ : ஜன. 3,**

**ஜப்பானில் 379 பேர் பயணித்த விமானம் தரையிறங்கியபோது தீப்பிடித்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.**

ஜப்பானின் ஹொக்கைடோவிலிருந்து டோக்கியோவுக்கு 379 பயணிகளுடன் ஜப்பான் ஏர்லைன்ஸ் ‘ஜெஏஎல் 516’ விமானம் புறப்பட்டது. இந்த விமானம் டோக்கியோவின் ஹனெடா விமான நிலையத்தில் தரையிறங்கியபோது விமானத்தில் தீப்பிடித்து எரிந்தது. தீப்பிடித்ததுடன் விமானம் தரையிறங்கிய வீடியோ காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஜப்பானிய தேசிய ஒளிபரப்பு கழகமான ‘என்எச்கே’ இதுகுறித்த வீடியோவை வெளியிட்டுள்ளது. ஹனெடா விமான நிலையத்தில் தரையிறங்கிய பின்னர் விமானம் மற்றொரு விமானத்துடன் மோதியிருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக ஜப்பான் செய்தி தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானில் புத்தாண்டு தினத்தில் 150க்கும் மேற்பட்ட முறை நிலநடுக்கம் ஏற்பட்டு பலர் உயிரிழந்துள்ளனர். இந்த பேரழிவிலிருந்து ஜப்பான் மீள்வதற்குள் அடுத்த துயர சம்பவமாக டோக்கியோவில் 379 பேர் பயணித்த விமானத்தில் தீ விபத்து ஏற்பட்டது.

விமானம் நின்றதும், பயணிகள், விமான ஓட்டிகள் அவசரமாக வெளியேற்றப்பட்டனர். அங்கு தயார் நிலையில் இருந்த தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். இந்த தீ விபத்து எவ்வாறு நேரிட்டது, இதில் பயணித்தவர்களுக்கு காயம் அல்லது உயிரிழப்பு நேரிட்டதா என்பது குறித்த தகவல்கள் உடனடியாக தெரியவரவில்லை. எனினும் இந்த சம்பவம் குறித்து விமான நிலைய அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நாடு திரும்பும் அமெரிக்க விமானம் தாங்கி கப்பல்

### வியூகத்தை மாற்றும் இஸ்ரேல்



**இஸ்ரேல் : ஜன. 3,**

**காஸாவில் அதிகரித்து வரும் உயிரிழப்புகள் காரணமாக எழுந்துள்ள சர்வதேச அழுத்தத்தால், அமெரிக்க விமானம் தாங்கி கப்பல் நாடு திரும்புவதால், இஸ்ரேல் தனது தாக்குதல் வியூகங்களை மாற்ற முடிவு செய்துள்ளது.**

இஸ்ரேல் மீது கடந்த அக்டோபர் 7ம் தேதி ஹமாஸ் அமைப்பினர் நடத்திய ஏவுகணை தாக்குதலில் 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதையடுத்து இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸ் படையினர் 500க்கும் மேற்பட்டோரை பணைய கைதிகளாக பிடித்து சென்றனர். இதையடுத்து காஸா மீது போர் பிரகடனம் செய்த இஸ்ரேல், தொடர் தாக்குதல்களை நிகழ்த்தி வருகிறது.

இந்த தாக்குதல்களில் காஸாவில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 21 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து சர்வதேச நாடுகள் பலவும் இஸ்ரேலுக்கு கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. இருப்பினும் அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகள் பலவும் இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவித்து, ஆயுத உதவிகளை செய்து வருகின்றன. இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும், ஹமாஸுக்கு ஆதரவாக தாக்குதல் நடத்தி வரும் ஹவுதி அமைப்பினருக்கு எதிராகவும், அமெரிக்காவின் யு.எஸ்.எஸ் ஜெரால்ட் போர்ட் விமானம் தாங்கி கப்பல் தலைமையில் 10க்கும் மேற்பட்ட போர்க்கப்பல்களை மத்திய தரைக்கடல் பகுதியில் நிலை நிறுத்தியிருந்தது.

இந்நிலையில் தற்போது போர்ட் விமானம்தாங்கிகப்பல் உட்பட 5க்கும் மேற்பட்ட கப்பல்களை நாட்டிற்கு திரும்ப அழைக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இருப்பினும் ஐசன்ஹோவர் விமானம் தாங்கி கப்பல் உட்பட 5 க்கும் மேற்பட்ட போர்க்கப்பல்கள் செங்கடல் பகுதியில் தொடர்ந்து நிலை நிறுத்தப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கப்பல்கள் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களை தடுத்து நிறுத்த தொடர் கண்காணிப்பில் ஈடுபடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம், ஹவுதி கிளர்ச்சியாளர்கள், ட்ரோன்கள் மூலம் சரக்கு கப்பல் ஒன்றை தாக்கியிருந்தனர். அதனை அமெரிக்க கப்பற்படை ஹெலிகாப்டர்கள் இடைமறித்து அழித்ததோடு, ஹவுதி கிளர்ச்சியாளர்கள் சென்ற 3 படகுகளையும் அழித்தது. இதையடுத்து தரைப்படையினரை பின்வாங்க வைத்து, மீண்டும் ஏவுகணை தாக்குதல்களை அதிகரிக்க இஸ்ரேல் வியூகம் வகுத்து வருகிறது. இதனால் காஸாவில் மீண்டும் உயிரிழப்புகள் அதிகரிக்கும் என அச்சம் நிலவி வருகிறது.

## பாகிஸ்தானின் தொடரும் நிதி நெருக்கடி மேலும் $700 மில்லியன் வழங்கும் ஐஎம்எஃப்



**பாகிஸ்தான் : ஜன. 3,**

**கடந்த ஜூலை மாதம், பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள பாகிஸ்தானுக்கு, வாஷிங்டனை மையமாக கொண்ட ஐஎம்எஃப் எனும் சர்வதேச நிதி நாணயம், $1.2 பில்லியன் வழங்கியிருந்தது.**

பாகிஸ்தானின் பொருளாதாரநிலையைஆய்வு செய்த ஐஎம்எஃப், தற்போது $700 மில்லியன் நிதியுதவி வழங்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த டிசம்பர் மாதம், இது குறித்து முடிவெடுக்கவிருந்த அதன் செயற்குழு சந்திப்பு, தள்ளி போடப்பட்டது. தொடர்ந்து, வரும் ஜனவரி 11 அன்று இது குறித்து ஆலோசிக்க உள்ளது.

பாகிஸ்தானின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) இவ்வருடம் 0.5 சதவீதம் குறைய வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ள ஆணையம், அதிகரிக்கும் விலைவாசியினால் பொருளாதாரம் நிலையற்றதன்மையை அடைந்திருப்பதாக எச்சரித்துள்ளது. கடந்த 2023 டிசம்பர் 22 காலகட்டத்தில், அந்நாட்டின் மத்திய வங்கியில் டாலர் கையிருப்பு $853 மில்லியன் அளவிற்கு உயர்ந்தது. இது ஐஎம்எஃப் விதித்திருந்த இலக்கை விட பாகிஸ்தான் கரன்சியில் ரூ.43 பில்லியன் அதிகம்.

கடந்த நவம்பர் மாதம், அந்நாட்டு நிதியமைச்சர், “மிக விரைவாக நிதியுதவி தேவைப்படுகிறது” என தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டே நிதியுதவி வழங்கினாலும், அதற்கு ஈடாக பாகிஸ்தானுக்கு ஐஎம்எஃப் பல்வேறு நிபந்தனைகளை விதித்தது. இவற்றை கடைபிடித்தாக வேண்டிய கட்டாயத்தால் பாகிஸ்தான் பல இலவசங்களையும், மானியங்களையும் நிறுத்தியுள்ளது.

இதன் விளைவாக பால், உணவு, பெட்ரோல், மின்சாரம் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கு வரலாறு காணாத உயர்வு அங்கு ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அங்கு சில வாரங்களில் நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் இவையனைத்தும் எதிரொலிக்கும் என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

## நிறவெறி கொடுமைகளை பதிவு செய்தவர் பிரபல புகைப்படக் கலைஞர் பீட்டர் மகுபேன் மறைவு



**தென்னாப்பிரிக்கா : ஜன. 3,**

**தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற நிறவெறி கொடுமைகளை புகைப்படங்களாக பதிவு செய்த பிரபல புகைப்படக் கலைஞர் பீட்டர் மகுபேன் தனது 91வது வயதில் உயிரிழந்தார்.**

தென்னாபிரிக்காவில் ’அப்பர்தீட்’ என்று அழைக்கப்படும் நிறவெறி கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்புவரை அமலில் இருந்தது. கருப்பின மக்கள் பொது இடங்களுக்கு வரவும், பொது போக்குவரத்தில் பயணிக்கவும் தடை நிலவி வந்தது. மேலும் அரசு சலுகைகள் பலவும் மறுக்கப்பட்டதால் கருப்பின மக்கள் பெரும் இன்னலுக்கு ஆளாகி வந்தனர். இதனை எதிர்த்து மகாத்மா காந்தி மற்றும் ஆப்பிரிக்காவின் காந்தி என்று அழைக்கப்படும் நெல்சன்மண்டேலா ஆகியோர் தொடர் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

குறிப்பாக நெல்சன் மண்டேலா நடத்திய போராட்டங்களால் சிறையில் அடைக்கப்பட்ட அவர் உலகில் மிக நீண்ட காலம் சிறையில் இருந்த தலைவர் ஆவார். தென்னாபிரிக்காவில் நடைபெற்ற நிறவெறி கொடுமைகளை உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் புகைப்படங்களாக பதிவு செய்வதில் மிக முக்கிய பங்காற்றியவர் பீட்டர் மகுபேன். இவர் ’ட்ரம்’ என்ற பத்திரிகையில் பணியாற்றியவர். இதற்காக அவர் பலமுறை சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தனது பள்ளிக்காலம் முதலே நிறவெறியை சந்தித்து வளர்ந்த பீட்டர், அதுதொடர்பான காட்சிகளை தனது புகைப்படம் வாயிலாக பதிவு செய்து உலகிற்கு எடுத்துரைத்தார். இதையடுத்து இந்த போராட்டங்களுக்கு உலகம் முழுவதும் ஆதரவு பெருகியது. ஆப்பிரிக்காவில் நடைபெற்ற போராட்டங்களிலேயே மிகப்பெரியதாக கருதப்படும் இந்த போராட்டம் தொடர்பாக பீட்டர் எடுத்த புகைப்படங்கள் உலகில் உள்ள பல்வேறு போர் சார்ந்த புகைப்படங்களை எடுக்கும் புகைப்படக் கலைஞர்களுக்கு மிகப்பெரிய உந்து சக்தியாக இருந்து வந்துள்ளன.

நிறவெறி போராட்டம் முடிவடைந்த பிறகு தென்னாப்பிரிக்காவில் உள்ள பழங்குடிகளின் வாழ்க்கை முறைகள் குறித்து தொடர்ந்து புகைப்படங்கள் வாயிலாக, பீட்டர் மகுபேன் பதிவு செய்து வந்தார். இந்நிலையில் உடல் நலக்குறைவு காரணமாக நேற்று முன்தினம் திங்கள்கிழமை அவர் உயிரிழந்தார். அவரது மறைவிற்கு உலகம் முழுவதும் உள்ள கருப்பின தலைவர்கள் மற்றும் நிறவெறிக்கு எதிரான சர்வதேச அமைப்பினர் தங்களது இரங்கல்களை தெரிவித்து வருகின்றனர்.

## தன்னை கடித்த எலியை பழிவாங்கிய கல்லூரி மாணவி

**பீஜிங் : ஜன. 3,**

**எலிஉயிரிழந்தநிலையில், மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட அந்த மாணவி நலமுடன் உள்ளதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.**

சீனாவில் 18 வயதான கல்லூரி மாணவி ஒருவர் அங்குள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் படித்து வருகிறார். இந்த நிலையில், அந்த மாணவியை எதிர்பாராதவிதமாக எலி ஒன்று கடித்துள்ளது. அந்த மாணவியின் விரலில் எலி கடித்ததாக கூறப்படுகிறது. இதனால் வலியால் துடித்த அந்த மாணவி ஆத்திரத்தில் அந்த எலியை பழிவாங்க நினைத்துள்ளார். இதனால் உடனடியாக தன்னை கடித்த எலியை பிடித்து வெறித்தனமாக கடித்து வைத்துள்ளார். அதன் கழுத்து பகுதியில் பலமாக கடித்து தனது கோபத்தை தீர்த்துக்கொண்டார். அந்த மாணவியின் வெறித்தனமான கடியால் அந்த எலி பரிதாபமாக உயிரிழந்தது.

எலி கடித்ததில் காயம் அடைந்த அந்த மாணவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு ரேபிஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. தொடர்ந்து மருத்துவமனையில் அந்த மாணவிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அந்த மாணவி நலமாக இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். இதுபோல யாரும் செய்ய வேண்டாம் என அந்த மாணவியின் தோழி எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்த சம்பவம் சீனாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## பயங்கரவாதி தாவூத் இப்ராஹிமின் மும்பை சொத்துக்கள் மீண்டும் ஏலம்





**புதுடெல்லி : ஜன. 3,**

**1993-ம் ஆண்டின் மும்பை தொடர் குண்டுவெடிப்பின் பின்னணியில் தேடப்படும் பயங்கரவாதியான தாவூத் இப்ராஹிமின் மும்பை சொத்துக்கள் மீண்டும் ஏலத்துக்கு வந்துள்ளன.**

1993, மார்ச் 12 அன்று அப்போதைய பம்பாய் மாநகரம் தொடர் குண்டுவெடிப்புகள் காரணமாக குலுங்கியது. 257 உயிர்கள் பலியானதோடு, 700க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அப்போதைய மதிப்பில் சுமார் 27 கோடி ரூபாய்க்கான சொத்துக்கள் நாசமாயின.

சிபிஐ மேற்கொண்ட விசாரணையில் அபும் சலீம் உள்ளிட்ட பல குற்றவாளிகள் தண்டனைக்கு ஆளானார்கள். குண்டுவெடிப்பு சம்பவங்களுக்கு மூளையாய் செயல்பட்ட பயங்கரவாதி தாவூத் இப்ராஹிம் தப்பியோடி வளைகுடா நாடுகளிலும், இறுதியாக பாகிஸ்தானின் கராச்சியிலும் அடைக்கலாமானார்.

ஃபெமா சட்டத்தின் கடத்தல்காரர்களுக்கு எதிரான உப பிரிவின் கீழ், தாவூத்தின் சொத்துக்களை அரசு கையகப்படுத்தியது. மகாராஷ்டிராவின் ரத்னகிரியில் உள்ள தாவூத் இப்ராஹிமின் சிறுபிராயத்து வீடு மற்றும் 3 விவசாய நிலங்கள் உள்ளிட்டவை, ஜனவரி 5, வெள்ளியன்று ஏல நடவடிக்கைக்கு ஆளாகின்றன.

தாவூத் இப்ராஹிமின் பூர்வீக சொத்துக்கள் இதற்கு முன்னதாகவும் ஏலம் விடப்பட்டுள்ளன. இவ்வாறு தாவூத் இப்ராஹிம் குடும்பத்துக்கு சொந்தமான 11 சொத்துக்கள், கடந்த 9 ஆண்டுகளில் ஏலம் போயுள்ளன. ரூ3.53 கோடி மதிப்பிலான 6 பிளாட்டுகள், ரூ3.52 கோடி மதிப்பிலான விருந்தினர் மாளிகை, ரூ4.53 கோடி மதிப்பிலான உணவகம் ஆகியவை உட்பட பல்வேறு சொத்துக்கள் முடக்கப்பட்டு ஏல நடவடிக்கைக்கு ஆளாகி வருகின்றன.

கராச்சியில் தாவூத் இப்ராஹிம் பதுங்கியிருப்பினும், அதனை பாகிஸ்தான் தொடர்ந்து மறுத்து வந்துள்ளது. மும்பை குண்டுவெடிப்பு வழக்கு விசாரணைக்காக தாவூத் இப்ராஹிமை இந்தியா கோரி வந்தபோதும், அவர் தங்கள் பாதுகாப்பில் இல்லை என்றே பாகிஸ்தான் சாதித்து வந்தது.

கடந்த மாதம் தாவூத் உணவில் விசம் கலக்கப்பட்டு அவர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும், அப்போது சிகிச்சை பலனின்றி அவர் இறந்துபோனதாகவும் தகவல் வெளியானது. எனினும் இணையத்தை முடக்கியதோடு, தாவூத் குறித்து வழக்கம்போல பாகிஸ்தான் கள்ள மவுனமே சாதித்தது.

# இக்கட்டான சூழல்களில் தமிழகத்துக்கு உறுதுணையாக இருக்கிறது மத்திய அரசு





# வருமான வரித் துறை அதிகாரிகளை தாக்கிய வழக்கு திமுகவினரின் 4 பேரின் ஜாமீன் ரத்து

# திமுக அமைச்சர்கள் மீதான வழக்குகள் விசாரிக்க தொடங்கினார் நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ்




சென்னை / புதுக்கோட்டை | 03.01.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சுவாமி துரியானந்தர் , இராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர், துறவி (பி.1863) (இ.1922)



நாராயணசாமி சீனிவாசன் , இந்திய தொழிலதிபர் (பி.1945)



சாவித்ரிபாய் புலே , இந்தியக் கவிஞர், செயற்பாட்டாளர் (பி.1831) (இ.1897)



வீரபாண்டிய கட்டபொம்மன் , இந்திய விடுதலை போராட்ட வீரர் (பி.1760) (இ.1799)



## இன்றைய நினைவு நாள்

குரியாக்கோஸ் எலியாஸ் சாவறா , இந்திய மதகுரு, புனிதர் (பி.1805) (இ.1871)



பொ. வே. சோமசுந்தரனார் , தமிழக உரையாசிரியர்; நாடகாசிரியர் (பி.1909) (இ.1972)



ஓ. வி. அழகேசன் , தமிழக அரசியல்வாதி (பி.1911) (இ.1992)



சதீஷ் தவான் , இந்தியப் பொறியாளர் (பி.1920) (இ.2002)

